# மரபுக்கதம்பம்

( கவிதைத்தொகுப்பு )

ஜோதிபாஸ் முனியப்பன்

வெளியீடு

தஞ்சைத் தமிழ் மன்றம்

புத்தகத்தின் பெயர் : மரபுக்கதம்பம்
வகை : கவிதை
ஆசிரியர் : ஜோதிபாஸ் முனியப்பன்
உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : தஞ்சைத்தமிழ்மன்றம்
12 புங்கஞ்சேரி தெரு
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு

வடிவமைப்பு : தமிழ்நெஞ்சம் அமின்
editor@tamilnenjam.com

பக்கம் : 72
சைஸ் : டெமி 1/8
விலை : ரூ 85 / -

பைந்தமிழரசு பாவலர் மா.வரதராசன்
( நிறுவுநர், பயிற்றுநர். பைந்தமிழ்ச்சோலை முகநூற்குழு )
அவர்களின்

# "அணிந்துரை"

என்று பிறந்தனள் என்றுணரவியலா இயல்பினளான எந்தமிழ்த்தாய், சீர்த்த பன்னூலாரத்தை தன் மேனியணிந்தவளாய் என்றும் இளமை குன்றாச் செழுமையுடன் வாழ்ந்து வருதற்கு முதன்மைக் காரணம் செய்யுள் எனும் யாப்பிலக்கணப்படியமைந்த மரபு பாக்களேயாகும்.

பாட்டுந் தொகையும் பகரும் மேன்மை
மீட்டும் இங்கே மிளிர்ந்திடல் வேண்டும்

என்னும் உயர்ந்த நோக்கத்தால் பைந்தமிழ்ச்சோலை என்னும் யாப்பிலக்கணப் பயிற்சிப்பட்டறையைத் தொடங்கினேன். அப்பட்டறையில் தன்னேரிலாத தனிச்சுடராய் மின்னும் பல பாவலர்களில் கவிஞர் ஜோதிபாசும் ஒருவர்.

சோலையின் மலர்களில் ஒருமலராகிய கவிஞர் இராம. வேல்முருகனின் கைப்பிடித்து மரபில் பயிலும் இந்நூலாசிரியர் பைந்தமிழ்ச்சோலையின் கடைக்குட்டி மாணவருமாவார். சோலை நடத்திய பட்டத்தேர்வில் தேர்ச்சியடைந்தவர். நந்தமிழாளின் இனிய இயல்புகளால் ஈர்க்கப்பட்டுப், உரைவீச்சு, துளிப்பா என்றெல்லாம் எழுதினாலும் மரபில் அதிக நாட்டமுடையவராய் விளங்குபவர்

கன்னித் தமிழாளின் காதற் கடைக்குட்டியாம் கவிஞர் ஜோதிபாசு அவர்களின் மரபு கதம்பம் என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்நாலுக்கு அணிந்துரை தரவேண்டும் என அவர் கேட்ட நேரம் எனக்கு உறங்கவும் நேரமில்லாக் கணத்த பணிச்சுமையான நேரமாகையால் தவிர்த்து வந்தேன். ஆயினும் அவர் விட்டபாடில்லை. தொடர்ந்து என்னை வற்புறுத்தவே.. இதோ இந்நூலைப் பற்றிச் சில...

மரபு கதம்பம் - ஒற்றுவருமா.!? வாரா.
ஏனெனில்,

ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை ஆயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

தொல்காப்பியம் 411

என்னும் விதிப்படி ஒற்றுமிகும் என்பர் பலரும்.

ஆனால், அடுத்த நூற்பாவான

ஒற்றிடை இனமிகா இடனுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே (412)

என்னும் விதியை அவர்கள் புரிதலின்றித் தவறிவிடுகின்றனர்.

மரபு - என்பதை மரப்பு என ஒற்று இரட்டித்து எழுதும் / சொல்லும் வழக்கமில்லை. எனவே, 412 ஆம் நூற்பாப்படி ஒற்றுமிகாமலே வரும்.

இந்நூலைப் படிக்கும்போது நான்குமாதக் குழந்தை நடைபயிலும் அழகையே பார்க்கிறேன். ஆம்... மரபில் முனைய வேண்டும்... புனைய வேண்டும் என்ற ஆர்வமும், ஊக்கமும் மிகஅதிகமாகவே தெரிகின்றன. அவ்வேளை, தத்தி நடைபயிலும் குழந்தை தடுமாறி விழுவதும் தவிர்க்கவியலாததேபோல், ஆங்காங்கே ஒற்றுப் பிழைகளும், மரபு வழுக்களும் மிகுந்துள்ளன. அவற்றை அடுத்துவரும் பதிப்புகளில் களைந்துவிடுவார் என்று நம்புகிறேன்.

இந்நூலின் சிறப்புகளைத் தனித்தனியாகப் பட்டியலியிட்டுச் சொல்லலாமாயினும், விரிவஞ்சியும் உங்கள் வாசித்தலைத் தடை செய்யாப் பொருட்டும் சிலவற்றை மட்டும் சுட்டுகிறேன்.

நாட்டின் முதுகெலும்பான உழவின் நிலையும், உழவனின் நிலையும் அவலத்திலிருப்பதைச் சுட்டும் கவிஞர்,

"விளைநிலங்கள் இங்குண்டு விழிநிறைய கனவுண்டு
விதைப்பந்தாய் நாமிருப்போம் வெள்ளாமை கண்டிடுவோம்"

என உழவை உயர்த்த அனைவரையும் ஒருமிக்கச் சொல்கிறார்.

கவிதையென்பது காலக்கண்ணாடி என்பர். தான் வாழுங்கால நன்னிகழ்வுகளை மட்டும் கூறாமல், கேடுகளையும்,இன்னல்களையும் பதிவு செய்வது கூடக் கவிஞனின் கடமையாகும். அத்தகு கடமையில் நின்று நடைபோடும் கவிஞர் ஜோதிபாசு, பெண்களுக்கு மட்டுமின்றிச் சிறுகுழந்தைகட்கும் இழைக்கப்படும் பாலியல் வன்மத்தைத் தோலுரிக்கிறார்.

"குற்றம் புரிந்தவனைக் கொண்டு செல்லுங்கள்
கூண்டில் அடைத்தவனின் குறியை யறுத்திடுங்கள்...!
சற்றும் யோசியாமல் புதுமை செய்திடுங்கள்
சட்டம் இயற்றிடுங்கள் கொடுமை யானதாக. . . ."

என்று பாலியல் குற்றத்திற்குத் தண்டனை எப்படியிருக்க வேண்டுமென்று தீர்வு கூறுகிறார்.

முயலாதிருந்து கொன்னே நாளைக் கடத்திவிட்டுப் பின் வருந்தும் மக்களை நோக்கி. . .

"முயற்சியொன்றே மூலதன மாகக் கொண்டு
முடிந்தவரை போராடு வெற்றி காண ..! "

என உழைப்பையும், முயற்சியையும் ஒருசேரக் கொண்டு வெற்றிக்கு வழிகாட்டும் கவிஞரின் சமூக அக்கறை போற்றத்தக்கதாம்.

இன்னும் எத்தனையோ பாடல்களை எடுத்துக்காட்டலாம் என்றாலும் உங்கள் சுவைப்பிற்குத் தடையாகும் காரணத்தால் இந்தளவில் நிற்கிறேன். ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறே பதமன்றோ.?

காலம் கடந்தும் இப்புவியுள்ள மட்டும் நிலைத்து நிற்கவல்ல நம் தாய்தமிழின் சிறப்புகளைக் காலந்தோறும் யாரேனும் கட்டிக் காப்பர்... தமிழுணர்வும், இனவுணர்வும் என்றைக்கும் மங்காது... அவை கனன்று கொண்டிருக்கும் தீக்கங்கு. எந்நாளும் அழியாமல் அனல் வீசும் அத்தமிழ்க் கங்கினில் மரபு பாக்கள் என்னும் சிறுகாற்று பட்டாலும் மீண்டும் சுடர்விட்டெழும் தன்மைத்தானது எம்மொழியாம் செந்தமிழ்.

அத்தகு தமிழின் செல்லக்குட்டியான கவிஞர் ஜோதிபாசு அவர்களின் இந்நூல் தமிழ்கூறு நல்லுலகில் நின்று நிலைக்கவும்,

அன்பினாலே அகிலத்தை ஆள வேண்டும்
அன்புகொண்ட நெஞ்சமாக வாழ வேண்டும்...!
ஆசைபடும் எண்ணங்கள் நடக்க வேண்டும்
ஆளும்தி றன்கொண்டே ஆள வேண்டும்...!

என்ற கவிஞரின் கனவு மெய்ப்படவும் வாழ்த்துகிறேன்.

வாழிய செந்தமிழ்.! வாழ்க நற்றமிழர்!

பைந்தமிழரசு
பாவலர் மா.வரதராசன்

7418867669

# வாழ்த்துரை

முகநூல் குழுக்கள் வழியாகப் பயணிக்கும் போது கிடைத்த ஒரு அருமையான நண்பராகவே நிலாமுற்றத்தின் வழி நண்பர் சோதிபாசு முனியப்பன் அவர்கள் கிடைத்தார்.

புதுக்கவிதைகளை எழுதிக்கொண்டிருந்த அவரை மரபின்பக்கம் இழுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதில் எனக்கு மகிழ்வே. கடந்த பத்துமாதங்களாக நிலா முற்றத்தில் நடத்திய மரபுக்கவிதைப் போட்டிகளில் பங்கு கொண்டு வெண்பா ஆசிரியப்பா வஞ்சிப்பா விருத்தம் என பலவகைப் பாக்களையும் கற்றுத்தேர்ந்த ஒரு மாணவராகவே மிளிர்கிறார். இன்னும் புணர்ச்சி விதிகளையும் ஒற்றுமிகும் இடங்களையும் கற்றுத்தேரவேண்டும் என்றாலும் தனது கவிதைகளைப் புத்தகமாக்கி வெளியிடும் அவரது துணிவு மற்றும் ஆர்வம் பாராட்டுக்குரியது.

தன்னை மரபுக்கவிஞனாக வெளிப்படுத்தும் ஆற்றல் போற்றுதற்குரியது. பிழையின்றி எழுதுபவர் எவருமில்லை என்பதுபோல் அனைத்தும் கற்றுத்தேர்ந்தவர் எவருமில்லை என்பதையும் உணர்ந்து வருங்காலத்தில் சிறந்த மரபொளிர்கவிஞராக மிளிர வேண்டும் என்பது எனது அவா. தமிழைப்பாடமாக எடுத்துக் கற்றுத் தேர்ந்தவர்களுக்கு இணையாக தானும் ஒரு மரபுக்கவிஞனாக வர முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு கிஞ்சித்தும் கர்வமோ திமிரோ இல்லாமல் உயர வேண்டும் என உள்ளன்புடன் வாழ்த்துகிறேன்

மரபுக்கதம்பம் மணக்கட்டும்

கதம்பத்தில் உள்ள அனைத்து மலர்களும் நாளை தனித்தனி மாலைகளாக மலர்ந்து மணந்து தமிழன்னையை அலங்கரிக்கட்டும்

வாழ்க வளர்க

இராம வேல்முருகன்
வலங்கைமான்
05.08.2019

# வாழ்த்துரை

முகநூலில் புதுக்கவிதை நான் எழுதிக் கொண்டிருந்த போது அதன் ஈர்ப்பால் என்னோடு நண்பரானார் இந்த நூலின் படைப்பாளர் கவிஞர் ஜோதிபாஸ் முனியப்பன்.பிறகு என்னால் நிறுவப்பட்ட நிலாமுற்றத்தில் முதல் ஆளாக இணைக்கப்பட்டவரும் அவரே.

அன்று புதுக்கவிதை எழுதவே கூச்சப்பட்ட கவிஞர் இன்று மரபில் கவிதை படைக்கிறார் எனும் போது பெருமகிழ்ச்சி அடையும் முதல் ஆளாக இப்போது நானிருக்கிறேன்.

எழுத்துத் துறையில் எல்லோருக்கும் ஆர்வம் வந்து விடாது அதுவும் கவிதைத்துறையில் நீடித்து நிலைப்பவர்கள் சிலரே. ஆனால் ஆர்வம் என்ற ஒன்று இருந்தால் மேலும் மேலும் கற்றறிந்து தனக்கென ஒரு இடம் பிடித்து சாதித்துக்காட்டுவர்.

அந்தச்சாதனையை ஜோதிபாஸ் நிகழ்த்திக்காட்டுவார்.பலர் போற்றும் நல்ல கவிஞராக வலம் வருவார் என்பதில் ஐயமில்லை. அவரின் எழுத்துப்பணிக்கு உற்ற துணையிருக்கும் அவரது இல்லத்தரசி துர்கா மகள்கள் ரம்யா,வர்ஷா ஆகியோருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

என் குடும்பத்திலும் ஒரு மரபுக் கவிஞர் வளர்ந்து வருகிறார் என்ற ஆனந்தம்.தம்பி ஜோதிபாஸ் இன்னும் வளர்வார். வானுயர்ந்த புகழ் பெறுவார்.

வாழ்த்துகளோடு

முத்துப்பேட்டை மாறன்
பேட்டை- முத்துப்பேட்டை

# வாழ்த்துரை

ஒளியான பெயரை ஏற்ற கவிஞர் ஜோதிபாசு முனியப்பன் அவர்கள் கவிதை உலகிற்கு நிலாமுற்றத்தின் கவிதைகளின் தேடல் வழியாக அறிமுகமாகி சிந்தனை விதைகளை அழகுற விதைத்தவர்.

மரபில் கவிதை எழுத வேண்டும் என்ற எனது விருப்பத்தை ஏற்று கன்னியாகுமரி கடற்கரையில் முதல் மரபுக் கவிதையை அழகுற இயற்றினார்.

தனிப்பட்ட ஆர்வ மிகுதியால் தன்னை ஒரு மரபுக் கவிஞராக முகநூலில் கவிதைகள் படைத்து பலரின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார். கற்பதில் ஆர்வமே அவரை மரபுக் கவிஞராக உயர்த்தியுள்ளது.

மென்மேலும் மரபில் பாட்டெழுதி பல நூல்கள் வெளியிட எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவிந்தராசன் பாலு,<br>
கும்பகோணம்.

# வாழ்த்துரை

உலகில் பழக இனியவர்; பைந்தமிழ்த் தோட்டத்துக் கனியிவர். முத்தமிழ் மைதானத்தில் மரபுக்கவிதையில் களமாட வந்திருக்கும் தமிழ்க் கவிஞன். மாங்காட்டு அம்மனை நேசிக்கும் மனிதநேயப் பண்பாளர்.

புதுப்புது சொல்லில் மரபுக்கவிமாலைத் தொடுத்து *தமிழன்னைக்குச்* சூட்ட வருகிறார். தமிழுலகம் இவரையும் ஏந்திக் கொள்ளட்டும்.

இயந்திரங்களின் வல்லோசையைக் கேட்டுக் கொண்டே இன்தமிழ் மெல்லோசையில் செப்பலோசை அகவலோசை துள்ளளோசையில் தமிழில் கவிதை ஒலி மீட்டும் இசைப்பாணனாய் வலம் வருகிறார்.

தன்வாயில் நீண்டநாள் சேகரமான விடத்தை மாணிக்கக் கல்லாக்கும் நாகம் போல் தன் மனதில் நீண்டநாள் «சாகரமான ‘» விடயங்களை மரபு மாறாமல் கவிதையாக்கும் திறன் பெற்றுள்ளார் இக்கவிஞர்.

வெண்பா என்பா. விருத்தப்பா எழுத எனக்கேது வருத்தம்பா. என்று தன்முனைப்போடு எழுதுகிறார்.

இக்கவிஞரின் கவித்திறனை அடையாளம் கண்டு வெளிக் கொணர்ந்தவர் *நிலா முற்றம் * கண்ட நித்தியச்சூரியன். முத்துப்பேட்டை மாறன் தான். தம்பி ஜோதிபாசுவின் கவிதை வல்லமை கண்டு பூவிருந்தவல்லி தொன்மைத் தமிழ்ச் சங்கம் பாராட்டிப் பட்டயம் வழங்கி உறுதி செய்தது.

இவரின் மரபுக்கவிதைதாகத்தை அறிந்து இவர் பிள்ளையாய் எழுதும் தமிழ்க் கவிதைகளை ஊக்குவித்து செம்மைப்படுத்துகிற கவிஞரேறு. மரபின் மகுடம். இராம வேல்முருகன் மற்றும் மரபுமாமழை கோவிந்தராசன் பாலு ஆகியோரைக் குறிப்பிடாமல் தம்பி ஜோதிபாசுவின் தமிழ் வரலாற்றை எழுதவே முடியாது. இன்றும் தன் தமிழ் இறக்கைக்குள்ளே பாதுகாக்கிற மரபுமாமணி. பாவலர். வரதராசனும் இக்கவிஞரின் தமிழ் தாகம் தீர்க்கும் “சுனைநீர்” ஆவார்.

தமிழுலகம் எல்லாக்குழந்தைகளையும் அரவணைக்கும். மரபில் தோய்ந்து கவிதை சுரபியாய் இந்நூல் மூலம் வெளிவரும் கவித்தம்பி. ஜோதிபாசுவின் கவிதைகளை தமிழ்கூறும் நல்லுலகம் தாங்கிப் பிடிக்கட்டும். அவர்தம் கவிதைகளை மனதில் ஏந்திப் படிக்கட்டும். அப்போதுதான் இவரின் தமிழ்ப் புலமை வெற்றிக்கொடி கட்டும்.

சுயமறுக்கும் மனிதரிடம்
பயமிருப்ப தில்லையே இந்த
சூட்சுமத்தை அறிந்தோராசை
வயமிருப்ப தில்லையே - உலக
மயமிருக்கும் எண்ணங்களில்
நயமிருப்ப தில்லையே -என்
மனமிருக்கும் ஜோதிபாசு கவிதையிலே
மாசிருப்ப தில்லையே...

வாரிக் கொடுக்கிற வானம் போல் தமிழ் ஊறிக் கிடக்கிற இதுபோன்ற கவிஞர்களைக் கொண்டாடுவோம்.

நன்றியுடன்
வைரவரி வானரசன்
நிர்வாக அறங்காவலர்
காந்திஜி மறுவாழ்வு மையம் (சமூகத் தொண்டு நிறுவனம்.)
பொதுச்செயலாளர்
தொன்மைத் தமிழ்ச் சங்கம் &
தமிழ் எழுத்தாளர்கள் சங்கம். சென்னை.
செல்பேசி : 8680903459.

# வாழ்த்துரை

இது - தமிழ்த்துறை சாராத ஓர் ஆலைத் தொழிலாளியின் மரபுக்கவிதை நூல்.நூல் முழுவதும் மரபின் பல்வேறு வடிவங்கள்.! மரபுக்கவிஞர்களில் பலரும் ஏதோவொரு வடிவத்திலேயே பெரும்பான்மையாக எழுதிக்கொண்டிருக்கும்பொழுது இவர் விருத்தத்திலிருந்து வெண்பா வரை அனைத்து வடிவங்களிலும் முயன்றிருக்கிறார். வெற்றிக்கம்பத்தையும் தொட்டுவிடுகிறார்.

பலமுகநூல் கவியரங்குகளில் இவரது கவிதைகளைக் கேட்டிருக்கிறேன். பண்ணைத்தமிழ்ச்சங்கத்திலும் பாடியிருக்கிறார். கைதட்டல் பெறுகிற புதுக்கவிதைகளை அரங்கில் விதைக்கும் ஆற்றலாளர் இவர். இலக்கண இலக்கியங்களைக்குறைவறக் கற்ற மரபில் வந்த பெருங்கவிஞர்களே புதுக்கவிதையின்பிதாமகர்களாக மாறிவிட்டகாலத்தில், தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பாடமாகப் படிக்காத ஒரு பொறியாளர் புதுக்கவிதையில் எழுதத் தொடங்கி, மரபிலே காலூன்றுகிறார். வாழ்த்தி வரவேற்போம்.

மரபுக்கவிதை தன் மரணப்படுக்கையில் கிடப்பதாகப் பலர் மல்லாந்து துப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதனைப் பொய்யாக்கப் புறப்பட்டவர்களில்இவரும்ஒருவராகத்தெரிகிறார்.கவிதைஎன்பதுநூறு சூரியர்களைப்பிழிந்து ஒற்றை நட்சத்திரம் செய்வது.செதுக்கப்படுகிற சிற்பம். சொற்சிக்கனத்தை மரபிலே கொண்டுவருகிறபொழுது, கவிதை தனக்குத்தானே விருது கொடுத்துக்கொள்ளும்.

விருதுதருகிறகவிஞராகசோதிபாசுமுனியப்பன்திகழவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இவரை வாழ்த்துவதற்குஎனக்குக்கூடுதல் காரணங்களும் உண்டு. என்னைப்போல் ஆலைத்தொழிலாளி இவர்.

என்னைப்போல் புதுக்கவிதையில் தொடங்கி மரபுக் கவிதையில் காலூன்றுகிறவர். என் மாவட்டத்துக்காரர் என்பதும் கூடுதல் தகுதிதானே !

வாழ்க கவிஞர் சோதிபாசுமுனியப்பன் ! வெல்க அவர்தம் அவா.

வாழ்த்துகளுடன் ,<br>
கவிக்கோ துரைவசந்தராசன்<br>
அமைப்பாளர், பண்ணைத்தமிழ்ச்சங்கம்.

# வாழ்த்துரை

ஊடகங்களின் பெருக்கம், சமூக வலைத்தளங்கள் தருகின்ற வாய்ப்பு, கவிதை எழுதுபவர்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் என்பவை கவிதைகளின் அதிகரித்த வரவிற்குக் காரணமாக அமைகின்றன. இக்காலம் புதிய எழுத்தாள கவிஞர்களுக்கு கிடைத்த பொற்காலம்.

எண்ணியதை எழுதி எத்தனைதான் முகநூல் போன்ற ஊடகங்களில் பதிவிட்டாலும் நூலாக்கப்பட்டு அது அச்சு வடிவத்தில் பார்க்கின்றபோது கிடைக்கின்ற மகிழ்ச்சிக்கு அளவேக் கிடையாது.

நண்பர் ஜோதிபாஸ் முனியப்பன் அவர்களை நான் அதிகம் அறிந்திருக்கவில்லை என்றாலும் அவரின் கவிதைகள்வழி அவரை அதிகமாகவே அறிய முடிந்தது பெரும் வியப்பே.

நல்ல ஆசிரியர்களின் வழிகாட்டலில் உருவாகியிருக்கும் சிறப்பான "மரபுக்கதம்பம்" மரபுக்கவிதை நூல், மரபை விரும்பும் வாசகர்களிடம் நல்ல வரவேற்பிருக்கும் என்றே நம்புகிறேன்.

நூலாசிரியர் இன்னும் பல நூல்களை எழுதி எழுத்துலகில் சிகரம் தொட வேண்டுமாய் வாழ்த்துகிறேன்.

அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்

ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் இதழ் & இணையம்
நிறுவனர், தலைவர் : FACT - France

# என்னுரை

தமிழ்ச்சான்றோர்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கங்கள்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் என்ற ஊரில் அகரம். இராம. முனியப்பன், தேவநாயகி ஆகியோருக்கு, ஐந்தாவது பிள்ளையாய் (மகனாக) பிறந்தேன்.

வறுமை சூழ்ந்த நிலையில் தான் என் ஆரம்பகால பள்ளிப் படிப்பு தொடங்கியது. பத்தாம்வகுப்பு வரை படித்தேன் பின் தொழிற்கல்வி பயின்றேன்.

தொழிற்கல்வி முடித்ததோடு வெளியூர்களில் நிறுவனத்தில் பணியாற்றினேன் நிரந்தரவேலைக்காக 6 வருடங்கள் உழைத்தேன் பலன் ஏதும் இல்லை.

1999 ஆண்டு எனது பிள்ளைப்பருவ நண்பர் திரு. சுரேஷ்குமார் மூலம் சென்னைக்கு வந்து கார் உற்பத்திசெய்யும் உபரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் பராமரிப்பு துறையில் பணிக்கு சேர்ந்து இருவரும் ஒன்றாக பணி செய்தோம். இன்றுவரை தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன்.நான் இன்றிருக்கும் நல்ல நிலைமைக்கு என் நண்பரே காரணம்.தடமில்லா பயணத்திற்கு தடமமைத்து தந்த என் நண்பன் 2008 ல் பிப்ரவரி 6 ஆம் தேதியில் இயற்கை எய்தினார். இந்த நேரத்தில் அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பிறகு முகநூல் தொடங்கி கிறுக்கல்களாய் எனது பக்கத்தில் பதிவுகளை பதிந்தநேரம் முத்தாய் பூத்ததொரு நட்பு முத்துப்பேட்டை மாறன் அய்யா அவர்கள் அவர்களின் கவிதை வாசித்தே நானும் கவியெழுத எண்ணம் கொண்டேன்.

காலம் கடந்து செல்கையில் மாறன் அய்யா தந்த ஊக்கமே என்னையும் கவிஞனாக வலம்வரச் செய்தது. புதுக்கவிதைகளை படைத்தேன் நிலாமுற்றம் எனும் முகநூல் குழுமம் அய்யாவுடன் தொடங்கி பல கவிதைகளை படைத்து சான்றிதழும் பெற்றேன். முதலாம் ஆண்டுவிழா கொண்டாடினோம்.

தங்கமாய் தேனாய் மரபு பூவொன்று பூத்தது மீண்டும் ஓர் நட்பு சொந்தம் அய்யா பாலு கோவிந்தராசன் அவர்களின் மூலம் கவியரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. கவியரங்கிற்கு

என்னை அறிமுகம் செய்து இரண்டாம் உலகத்தமிழர் எழுத்தாளர் மாநாட்டில் கவியரங்கத்தில் கலந்துகொண்டு கவிபாடிய மகிழ்வான தருணம் இன்று வரை என் கவிபயணத்திற்கு உறுதுணையாக இருந்து என்னை உயர்த்திற்கு கொண்டு சென்ற பெருமை அய்யாவையே சேரும்.

தொடர்ந்து கொண்டிருந்த கவிதைப் பயணத்தில் இரண்டாம் ஆண்டு விழாவை மிகச்சிறப்பாக நடத்தினோம் அவ்வமயம் மீண்டும் ஓர் நட்புச்சொந்தமாய் உடன் பிறந்த அண்ணனாய் இணைந்த மரபு கவிஞர் வலங்கைமான் இராம. வேல்முருகன் அவர்களின் கவிதைகளை கண்டு கேட்டு வாசித்து மெய்சிலிர்த்தேன். வெண்பாவின் ஆளுமை என்றே சொல்லலாம். எனக்கும் மரபில் கவிதை எழுத அடித்தளமாய் அவரின் வரிகளும் சொல்லாடலும் என்னைக் கவர்ந்தது. ஆசானாய் நான் இன்று வரை மரபுக் கவிதைகளை அவரிடம் எழுதிக்கொண்டு வருகிறேன்.

கவிதை எழுதியதும் ஆசானுக்கு அனுப்பி பிழைகளைச் சுட்டச் சொல்வேன் இப்படியாக என் மரபு கவிப்பயணம் தொடர்ந்து இன்று மரபுக்கதம்பம் எனும் நூல் வெளியீடு வரை வந்திருக்கின்றேன்.

இன்னொரு சிறப்பும் உண்டு மரபுப்பாவலர் அய்யா வரதராசன்... பைந்தமிழ்ச் சோலையில் என்னையும் இணைத்து இன்னும் பல மரபுகளைக் கற்றுத்தந்தார் மரபுபில் பாவலர் பட்டத்தேர்வில் என்னையும் தேர்வு எழுதவைத்தார் 61 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப் பெற்றேன்.

அனைவருக்கும் என் நன்றிகள் ...

ஜோதிபாஸ் முனியப்பன்

# மரபுக்கதம்பம்

# குடிகாக்க வந்திடுவாய் குழைந்து

குன்றில் இருக்கும் குமர குருபரா
என்னில் குடியிருக்கும் என்னவனே - என்றும்
துணையாய் இருந்து துயர்துடைப் பாயே
இணையாய் வருவாய் இருந்து...!

உருகித் தொழுதே னுனையே அருள்வாய்
மருவி வருவாய் மாற்றம் தரவே
திருவாய் மலர்வாய் திருப்பம் தருவாய்
வருவேனே நானும் விரைந்து...!

கார்த்திகையில் மாலைபோட்டு கன்னிசாமி யாகவந்தோம்
நேர்த்தியாக நோன்பிருந்தோம் நேயமுடன் - மார்கழியில்
சாந்த சொரூபனை சன்னதியில் காணவே
காந்தமலை வந்தோம் கனிந்து..

வெள்ளி விடியலில் வெற்றிவாகைச் சூடிட
வள்ளிதெய் வானை வணங்குவோம் - பிள்ளைகள்
நலம்பெற வேண்டியே நிற்போம் அருள்வாள்
குலமது தழைக்கக் கொடுத்து

## ஆடி மாதம்

( வெண்பா )

ஆடி பிறந்ததும் அம்மனை வேண்டுவோம்
நாடி வருவோம் நலம்பெற - தேடிவந்தோம்
உன்னைத்தான் தாயே உலகாளும் உத்தமியே
பாடி வருவோம் பணிந்து

## கருமாரி

( நேரிசை வெண்பா )

காக்கும் கருணைக் கடலே கருமாரி
தாக்கம் தணிப்பாய் திருவருளே - நோக்குவாய்
காலமெல்லாம் காத்திடவே கண்திறந்து பாரம்மா
கோலவிழித் தாயே தழைந்து

## தாயின் பிரிவு

( நேரிசை வெண்பா )

நீயில்லா  நாளிங்கு நீளமா யானது
தாயில்லாப் பிள்ளையாய்த் தங்குகிறேன் - நோயினில்
வாடவில்லை உன்னோடு வாழ்ந்தநல் வாழ்க்கையில்
தேடா இடம்சென்ற தேன்...!

## தமிழ்

( நேரிசை வெண்பா )

அந்தமின்றி நிற்பவளே அன்னைவழிச் செம்மொழியே
வந்தனைகள் செய்திடாது வந்தவளே - செந்தமிழே
முந்திப் பிறந்தவளே மூத்தவளே முத்தமிழே
வந்தேனே என்னையும் வாழ்த்து.

## தலைமை வணக்கம்

( இன்னிசை வெண்பா )

தென்னவரே தென்னவரே தென்மதுரைத் தென்னவரே
மன்னவரே மன்னவரே மாமதுரை மன்னவரே
நின்பா தருவாய் நினைவில் இனிக்கவே
அன்பால் எனையும் அணைத்து..!

## சந்தனமே

( நேரிசை வெண்பா )

சிந்தையில் வந்தாயே சீர்மிகு செந்தமிழே
தந்தையுமாய் வந்தாயே தண்டமிழே - சந்தனமே
உன்புகழ்ப் பாட உலகமே சுற்றுவனே
என்றுமென் நாவில் எழு

## உயர்வு

( நேரிசை வெண்பா )

கள்ளமில்லா உள்ளம் குழந்தையி னுள்ளமே
கிள்ளை மொழிபேசும் கண்மணியே - தள்ளாமை
கொள்ளாதே நாளும் கொதித்தெ ழுவாய்நீயே
உள்ளத்தால் கொள்ளு முயர்வு

## வண்ணமாய்ப் பெற்றிடலாம் வாழ்த்து

( சிந்தியல் வெண்பா )

தேனின் சுவைகொண்ட தேன்மொழியே யுன்னைநோக்க
மானின் விழிபோல் மயக்கிடும் பாவையே
வானிலவு தந்திடும் வாழ்த்து...

கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமே
எண்ணும் எழுத்துகளும் ஏட்டினில் ஏற்றிட
வண்ணமாய்ப் பெற்றிடலாம் வாழ்த்து

## வாராயோ அன்னையே வா!

( பஃறொடை வெண்பா )

கற்ற தமிழையே கண்ணிமையாய் நான்காப்பேன்
உற்ற துணையாய் உடனிருப்பாய் செந்தமிழே
பெற்ற பெயரையும் போற்றி வளர்ப்பேனே
உற்றவரும் கற்றிடவே உள்ளத்தில் காத்திடவே
பாரெங்கும் பண்ணிசை பாட்டொலியும் கேட்கும்
உரமாகத் தூவி உயர்வாய் உயர்ந்திடுவோம்
பேர்சொல்லும் பிள்ளையென பேரோடு வாழ்த்திடவே
வாராயோ அன்னையே வா!

## மாமழையே வா வா

( அறுசீர் விருத்தம் - காய் மா காய் )

வழியோர மெங்கும் மழைநீராய்
          வழிந்தோடு கிறது வற்றாராய்...!
எழில்கொஞ்சு மழகாய் தாவரங்கள்
          எழுந்துநின்று காட்சி தருகிறதே...!
அழியாத செடியும் பூத்துநின்று
          அலங்கார மாக காட்சிதந்தே
விழிபிதுங்க வைத்த மாமழையே
          வழித்துணையாய்  என்றும் வாமழையே...!

# கல்வி

( எண்சீர் விருத்தம் - காய் காய் மா தேமா )

கல்லாத வரின்வாழ்க்கை கருமை ஆளும்
　　காலத்தால் அழியாத இருளே நாளும்...!
இல்லாத நிலைதானே நாளு மென்று
　　இயன்றவரை கற்றறிந்து வாழ்வோம் நின்று ...!
கொல்லாமல் கொன்றிடுமே கல்லாக் கல்வி
　　கொடையவனாய் இருந்தாலும் வேண்டும் கல்வி ...!
கல்வியில்லா வாழ்க்கையுமே நரகம் தானே
　　கற்றபின்னே என்றென்றும் சொர்க்கம் தானே...!

கற்றவர்கள் சிறந்திடுவார் கல்வி யில்தான்
　　காலமெல்லாம் நமைக்காக்கும் வாழ்க்கை யில்தான் ...!
பொற்காலம் தான்கற்ற தனைத்தும் தானே
　　பொங்குமின்பம் பெற்றிடலாம் வளமை தானே...!
பெற்றோரும் ஆசானும் தந்த கல்வி
　　பெற்றதனைத் தும்வைத்து வாழ்வோம் சொல்லி...!
உற்றாரும் உறவினரும் மதிப்பார் பாரு
　　உடன்வருநற் கல்வியாலே பெறுவார் பேரு

வள்ளுவனும் தந்திட்டான் வாழ்வில் கல்வி
　　வளமாக நாம்வாழ அமைக்கும் வேள்வி ...!
தெள்ளுதமிழ் தேனாகத் தமிழைத் தந்தான்
　　தென்றலென தவழ்ந்துவந்து மூச்சாய் நின்றான்...!
உள்ளங்கை தன்னிலவன் உலகை வைக்க
　　உவகையுடன் வாசித்து மனதைத் தைக்க ....!
கள்ளூறும் பாக்களையும் ஏட்டில் வைத்து
　　காலத்தா லழியாதக் குறளைத் தந்து....!

# விதைப்பந்து

( எண்சீர் விருத்தம் காய் காய் காய் காய் )

வண்ணமாக தமிழ்மணக்க வையகத்தில் விதையூன்று
வான்புகழைப் பெற்றிடவே வளர்தமிழில் கவியூன்று...
எண்ணமதில் ஏற்றமுற என்தமிழாய் வாழ்ந்துவிடு
இன்றமிழின் விதைப்பந்தாய் இவ்வுலகில் இருந்துவிடு...!
எண்ணற்ற இலக்கியங்கள் தமிழினிலே படைத்துவிடு
எப்பொழுதும் தமிழ்வளரும் எண்ணமதை விதைத்துவிடு...!
கண்ணையிமைக் காப்பதுபோல் கனித்தமிழைக் காத்துவிடு
கள்ளமில்லா உள்ளமதில் விதைப்பந்தாய் முளைத்துவிடு ...!

விளைநிலங்கள் இங்குண்டு விழிநிறைய கனவுண்டு
விதைப்பந்தாய் நாமிருப்போம் வெள்ளாமை கண்டிடுவோம்
களைகளெலாம் இங்குண்டு களைவதற்கு மனமுண்டு
களைநீக்கும் விதைப்பந்தாய் காரியங்கள் ஆற்றிடுவோம்
முளைத்துவிடத் தமிழுண்டு முழுநிலவாய்க் கவிஞருண்டு
முத்துமுத்துக் கவிதைகளை விதைப்பந்தாய் விதைத்திடுவோம்
துளைத்தெடுக்கும் குண்டுகளாய் நம்கவிதை இருக்கட்டும்
துணைவருநற் றோழர்களின் துணிவுகளும் பிறக்கட்டும்

ஊழலெலாம் போக்கிடவும் உன்மத்தர் அழிந்திடவும்
உலகத்தில் நம்தமிழர் உயரத்தைத் தொட்டிடவும்
வேழமென நீயெழுந்து விளையாடி மகிழ்ந்திடவும்
வெற்றிகளைக் குவித்திடவும் விதைப்பந்தாய் ஆகிவிடு
ஆழமாகச் சிந்தித்தே அருந்தொண்டை ஆற்றிவிடு
அகங்காரம் பொசுக்கிவிடு அன்பைத்தான் விதைத்துவிடு
வாழத்தான் பிறந்தோம்நாம் வாழ்ந்துநாமும் பார்த்திடுவோம்
வையத்துள் வாழ்வோரின் விதைப்பந்தாய் நாமிருப்போம்...!

## உள்ளம் கொதிக்குதடா

( எண்சீர் விருத்தம் )

உள்ளம் கொதிக்குதடா உன்னை நினைக்கையிலே
உயிரும் நடுங்குதடா உன்னை பார்க்கையிலே...!
கள்ளப் பார்வைவழி பழகும் மிருகமென
கண்டு வெட்கமாக இருக்கு தடாமனிதா...!
துள்ளும் மழலையிடம் என்ன கண்டாயோ
துள்ளி விளையாடும் மகளை பார்த்தாயோ...!
அள்ளி அணைத்திடவே ஆசை வேண்டுமடா
ஆசை தீர்த்திடவே மழலை தேவையாடா....!

குற்றம் புரிந்தவனைக் கொண்டு செல்லுங்கள்
கூண்டில் அடைத்தவனின் குறியை யறுத்திடுங்கள்...!
சற்றும் யோசியாமல் புதுமை செய்திடுங்கள்
சட்டம் இயற்றிடுங்கள் கொடுமை யானதாக
உற்றுப் பார்க்கட்டும் ஊரார் இவர்களையே
உலகம் வியக்கட்டும் நம்மின் சட்டமதை...!
மற்ற வர்களுக்கும் பார்க்க வேண்டுகிறேன்
மனித னாகவாழ இறையை வேண்டுகிறேன் ....!

## மதுவை விடு

( ஆசிரியத்தாழிசை )

மதுவை யருந்த மனைவியை மறந்து
முதுமைக் காலத்தில் முடங்கி விடாதே
குதுகல வாழ்வை குலைத்து விடாதே... !
மதுவால் வாழ்க்கையை மறந்து விடாதே

# அன்னைத்தமிழே வாழி

( எண்சீர் விருத்தம் - காய் மா காய் தேமா )

முத்தமிழே தாயே மூத்தவளும் நீயே
மூவுலகை யாளும் என்னுயிரும் நீயே...!
தித்திக்கும் தமிழே திகட்டாத தேனே
தினந்தினமும் உன்னை சுவைத்திடுவேன் நானே ...!
முத்தமிட்டு உனையும் உச்சிமுகர் வேனே
முந்திவந்து தானே முழுமனதாய் நானே....!
சத்தமிட்டே உறைப்பேன் தாயேநீ வாழி
சாதனைகள் படைக்கக் கரம்கொடுப்பாய்த் தோழி...!

அஞ்சாது வருவாய் அகிலமெல்லாம் நீயே
அன்னையாக வந்து காத்திடுவாய் தாயே...!
வஞ்சமில்லா தாயே வண்டமிழாய் நீயே
வண்ணமாகப் பாவும் தருவாயே தாயே...!
கொஞ்சிடுவேன் உன்னை குழந்தையாகத் தானே
கொதித்தெழுந்து காப்பேன் என்றென்றும் நானே...!
எஞ்ஞான்றும் போற்றும் ஏற்றமிகு தாயே
இயற்றமிழாய் இயங்கும் இன்னிசையும் நீயே ...!

செந்தமிழே தாயே தென்றலென வந்தாய்
செழுமையுடன் நின்று தெம்மாங்கு தந்தாய்...!
வந்தோரை வாழ வைத்திடுவாய் தாயே
வளமான வாழ்வும் தந்திடுவாய் நீயே...!
அந்தமில்லா வந்த மொழித்தாயே வாழி
அகிலமெல்லாம் வாழும் என்னன்னை வாழி...!
சொந்தமென வந்தாய் சொர்க்கமதைத் தந்தே
சொத்தாக நின்று சொக்கவைத்த தாயே...!

பயிராக பாவும் படைக்குமொழி நீயே
பட்டொளியாய் பறந்து வீசிடுவாய் தாயே...!
ஞாயிறாக நிற்கும் செந்தமிழே வாழும்
ஞானிகளும் உரைத்த அன்னைமொழி ஆளும்...!
உயிர்மொழியாம் தமிழே உளமாற வாழி
உள்ளத்துள் என்றும் உயிராக வாழி ...!
உயிர்மெய்யும் கலந்து உயிராகப் பற்றி
உயிரினிலே கலந்த தாய்மொழியே போற்றி... !



ஜோதிபாஸ் முனியப்பன்

## கதிரவன்

(அறுசீர் விருத்தம்)

தென்றலின் தழுவலில் வருவான்
தென்கீழ்த் திசைதனி லுதிப்பான்
நன்னிலம் காத்திட வருவான்
நாளுமே ஒளியையும் தருவான்...!
முன்பனி யும்வரும் இதமாய்
முள்ளிலே பூத்திடும் பதமாய்...!
இன்னலைப் போக்கிட வருவாய்
இன்பமாய்ப் பொழுதைத் தருவாய்...!

## முத்தமிழே

(பதினாறு சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
காய் காய் காய் மா காய் காய் காய் மா )

முத்தமிழே முதன்மையான மூத்தமொழி நீயே
முந்திவந்த எம்மொழியே செந்தமிழே தாயே
முன்னின்று என்னையேற்றும் பைந்தமிழே என்று
முன்புகழை பாடவரு வாயென்னில் நின்று ...!

தித்திக்கும் தீந்தமிழே திகட்டாது நானும்
தினந்தோறும் வாசிப்பேன் என்றுமுனைத் தேனாய்
திருவருளைத் தருவாயே தண்டமிழே என்றும்
திகழ்வேனே உன்னருளைப் பெற்றதாலே நின்றும்....!

சொத்தாக நீவந்தால் சீர்பெறுவேன் நானே
சிந்தையிலே நின்றிடுவாய் சத்தாகத் தானே
சத்தமில்லாத் சரித்திரமே சாதனைகள் தருக
சந்தமோடு வந்தேயென் சிந்தனையைப் பெருக்க....!

நித்தமுமே நீயெந்தன் நிழலாக வந்தாய்
நீங்காத புகழ்பெறவே நின்தமிழைத் தந்தாய்
நிம்மதியாய் நான்கற்க நற்றமிழாய் நின்றாய்
நலம்பெறவே என்றென்றும் துணையாக நிற்பாய் ....!

# எல்லோரும் வெல்வோம்

( எண்சீர் விருத்தம் - காய் காய் மா தேமா )

முயற்சியொன்றே மூலதன மாகக் கொண்டு
முடிந்தவரைப் போராடு வெற்றி காண ..!
பயிற்சிகளை முறைப்படியாய் பெற்று நீயும்
பாடுபடு வெற்றியென்றும் உன்னைச் சேரும்...!
அயராம லுழைத்தாலே அல்லும் பகலும்
ஆண்டவனும் எப்போதும் துணையி ருப்பான் ...!
துயரங்கள் ஓடிடநாம் துரத்திச் செல்வோம்
துணிவாகப் பயணித்து நாளும் வெல்வோம்...!

ஒற்றுமையாய்ச்,செயல்படுவாய் கரம்நீ பற்றி
ஓயாமல் நீநடந்தால் உறுதி வெற்றி...!
பற்றோடும் பணிவோடும் இலக்கைத் தொடுவோம்
பாங்குடனே உழைத்துநாமும் வெற்றி கொள்வோம்...!
சிற்றெண்ணம் கொள்ளாமல் சிறப்பாய் வாழச்
சீரான முயற்சியினைக் கொள்வோம். வாழ்வில்...!
வற்றாத வளமெல்லாம் வாய்க்கப் பெற்று
வாழ்வினிலே எல்லோரும் வெல்வோம் வாரீர்.!

# எனக்கென பிறந்தவள்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
விளம் மா விளம் மா விளம் விளம் மா)

மனத்தினில் வந்து தித்தவள் நீயே
மயக்கிடும் விழியவள் நீயே..!
வனத்தினில் மலர்ந்து வருபவள் நீயே
வளமையைத் தருபவள் நீயே...!
மனமதைத் தேனாய்த் தருபவள் நீயே
மணமுடை மலர்ப்பதம் நீயே...!
எனதுயிர் சுமக்கும் கருவறை நீயே
எனக்கெனப் பிறந்தவள் நீயே...!

## காதலி

(தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்.)

மின்னல் பார்வையில் மின்னிடச் செய்பவள்
அன்னத் தூவிபோல் அன்பினில் மென்மையள்
கன்னல் பாக்களால் கட்டியி ழுப்பவள்
என்றன் காதலி இன்றையத் தாயவள்

## கண்ணே மணியே

( எண்சீர் விருத்தம் - மா மா விளம் புளிமா )

கண்ணே மணியே கருவினில் உருவாய்க்
காட்சித் தந்தாய் கணினியில் திருவாய்...!
பெண்கள் போற்றும் பேதமை உயிரே
பெண்ணாய்ப் பிறந்து வந்தபூந் தளிரே...!
கண்ணாய்க் காப்பேன் உன்னையும் கருத்தாய்
கால மெல்லாம் நல்லதோர் மருந்தாய் ..!
மண்ணில் வாழும் நாட்களி லுயிராய்
மறவா துவாழ்வோம் மகிழ்ந்திடும் உறவாய்...!

## தாய்மை

(எண்சீர் விருத்தம்)
விளம் விளம் காய் விளம்
விளம் விளம் மா தேமா

தாயவள் மட்டுமே தரணியிலே சிறந்தவள்
தாயவள் மடியினில் தவழ்வ தாலே...
தாயவள் தாங்கிடும் தங்கமாக விளங்குவாள்
தாய்மையைப் போற்றியே புகழ்வ தாலே...!
தாயவள் பாதமும் தழுவிடத்தான் பணிவேனே
தாயவள் என்றுமே மகிழ்வ தாலே...!
தாய்மையை எந்நாளும் தெய்வமாக வணங்கிடு
தாயவள் அன்பையும் பொழிவ தாலே...!

# தித்திக்கும் தமிழே

( எண்சீர் விருத்தம் )

காய் மா காய் தேமா காய் மா தேமா தேமா

தித்திக்கும் தமிழே திகட்டாத உன்னை
        தினந்தோறும் பாட என்னில் வாவா...!
சத்தமில்லாத் தமிழே சாந்தமாக நீவா
        சந்தோச மாக உன்னைப் பாட...!
முத்தான முத்தே முனிதந்த சொத்தே
        முளைத்துவந்த தமிழே என்றன் வித்தே...!
வித்தகனாய் நானும் வித்திடவே வாவா
        விடியலாக வந்தே என்னை வாழ்த்த ...!

# இயலுமென்று நீவந்(து) இயம்பு

( நேரிசை ப ஃறொடை வெண்பா )

செந்தமிழே தாயே செழுமை மிகுந்தவளே
வந்தே னுனையும் வணங்கிடவே - சிந்தையில்
ஏற்றுக என்னையுமே ஏற்றமிகு வாழ்விலே
கற்கும் மொழியே கனித்தமிழே - சொற்சுவையே
என்றுமென் நாவில் எழுகின்ற என்தாயே
வென்றிடுவேன் உன்னால் உலகையே- நன்றாய்
இயற்றவே பாக்களை இன்றமிழே என்னால்
இயலுமென்று நீவந்(து) இயம்பு

# தமிழே எந்தனுயிர்

( அறுசீர் விருத்தம் )

தேமா புளிமா தேமா
தேமா புளிமா தேமா

அன்னைத் தமிழைக் கற்க
ஆர்வம் கொடுத்துச் சென்றாய்
என்றன் குருவாய் வந்து
ஏட்டில் எழுத வைத்தாய்
கன்னித் தமிழைக் கற்றேன்
கற்ற தமிழைக் காப்பேன்
என்றும் மறவேன் தாயே
என்றன் உயிரும் நீயே...!

# சிறக்கட்டும் உறவு

( அறுசீர் விருத்தம் )

காய் மா காய் மா காய் காய்

உறவாக வந்து உயிரானாய் இன்று
உள்ளங்கள் போற்றிடவே..!
மறவாது நடந்து கொண்டாலே நன்று
மாற்றங்கள் நடந்திடுமே....!
பறந்திடுவோம் என்றும் வான்புகழைப் போன்று
பாரினிலே வளர்ந்திடவே...!
சிறக்கட்டும் உறவு உயிராக வென்று
சிகரத்தைத் தொட்டிடவே ...!

## வட்டமுகம்

( அறுசீர் விருத்தம் )

காய் தேமா காய் தேமா காய் காய்

வட்டமுகம் கொண்டு வடிவாக நின்றாள்
வாஞ்சையுடன் வாசித்தாள்..!
கட்டழகி வந்தாள் கற்கண்டு தந்தாள்
கணநேரம் சிந்தித்தாள்...!
திட்டமொன்றைத் தீட்டி என்னருகே வந்தாள்
தினமுமெனைச் சந்தித்தாள்...!
பட்டினத்து மாம னெனைக்காதல் செய்தாள்
பக்குவமா யெனைச்சேர்ந்தாள்...!

## ஓதும் மறைபொருள்

( எழுசீர் விருத்தம் )

மா மா விளம் மா மா விளம் மா

அன்பி னுருவில் ஆளவந் தாயே
அன்னை யாகநின் றாயே..!
என்றும் வாழும் நெஞ்சினி லிருந்து
ஏற்று நடந்திடு சிறந்து ..!
நன்றாய் வாழ்வோம் நானிலம் நோக்க
நம்மின் நட்பினைக் காக்க ...!
ஒன்று கூடி வலம்வரு வோமே
ஓதும் மறைபொருள் நாமே...!

# கஜா புயல்

( எழுசீர் விருத்தம் )

மா விளம் மா விளம் மா மா விளம்

பச்சைப் பசுமையாய் மரங்க ளிருந்தன
பார்க்கு மெல்லா இடமுமே...!
இச்சைக் கொள்ளநீ வந்தாய்ப் புயலென
இடியாய் வந்தி றங்கியே ...!
மச்சு வீடுமே மக்கிப் போனதே
மாடி வீடும் இடிந்ததே...!
மிச்ச மெதுவுமே யில்லா தாக்கினாய்
மனசாட் சியில்லா தபுயலே...!

# என்றன் மகளவள்

( வஞ்சித் தாழிசை )

அன்பில் அயர்ந்தவள்
அன்னை உருவவள்
என்றும் உயிரவள்
என்றன் மகளவள்...!

கண்ணின் மணியவள்
பெண்ணின் குலமவள்
மண்ணின் மலரவள்
என்றன் மகளவள்...!

கொங்குத்  தமிழவள்
பொங்கும் எழிலவள்
எங்கும் நிறைபவள்
தங்கும் மகளவள்...!

## நீயில்லாது தவிக்கின்றேன்

( வஞ்சி விருத்தம் - தேமா மா காய் )

நீயில் லாத நாளெல்லாம்
தீயில் வெந்து தவிக்கின்றேன்
தாயின் ஈகை தொலைக்கின்றேன்
நோயில் வாடி நொடிக்கின்றேன்

## எல்லோரும் வெல்வோம்

( எண்சீர் விருத்தம் - காய் காய் மா தேமா )

முயற்சியொன்றே மூலதன மாகக் கொண்டு
முடிந்தவரை போராடு வெற்றி காண ..!
பயிற்சிகளை முறைப்படியாய் பெற்று நீயும்
பாடுபடு வெற்றியென்றும் உன்னைச் சேரும்...!
அயராம லுழைத்தாலே அல்லும் நாளும்
ஆண்டவனும் எப்போதும் துணையி ருப்பான் ...!
துயரங்கள் ஓடிடநாம் துரத்திச் செல்வோம்
துணிவாக பயணித்து நாளும் வெல்வோம்...!

ஒற்றுமையாய் செயல்படுவாய் கரம்நீ பற்றி
ஓயாமல் நீநடந்தால் உறுதி வெற்றி...!
பற்றோடும் பணிவோடும் இலக்கைத் தாண்டிப்
பாங்குடனே உழைத்துநாமும் வெற்றிக் கொள்வோம்...!
சிற்றெண்ணம் கொள்ளாமல் சிறப்பாய் வாழச்
சீரான முயற்சியினைக் கொள்வோம். வாழ்வில்...!
வற்றாத வளமெல்லாம் வாய்க்கப் பெற்று
வாழ்வினிலே எல்லோரும் வெல்வோம் வாரீர்.!

# என்மகள்

தேமா கூவிளம் கூவிளம் கூவிளம்

கட்டளைக் கலித்துறை

என்னில் வந்தவள் என்னையு மாள்பவள்
எல்லாம் நானென வேயிருப் பாளவள்...!
என்னை மட்டுமே நோக்கனு மேயென
என்று மென்னிடம் சொல்பவள் என்மகள்...!
அன்பில் அன்னையாய் என்னுடன் வாழ்பவள்
அப்பா என்றழைப் பாள்மகள் பாசமாய்...!
கன்னம் காட்டியே கட்டிய ணைப்பவள்
கண்ணில் காட்சியாய் தோன்றிய தெய்வமே...!

# வலங்கை வேல்முருகன்

( எண்சீர் விருத்தம் )

வலங்கைமானின் ஊரினிலே வளமாக பிறந்தவரே
வந்தனைகள் செய்யாது வசந்தமாக வாழ்பவரே...!
இலக்கணங்கள் கொண்டவரே இலக்கியங்கள் படைத்தவரே
இமியளவும் இன்னல்கள் தாராமல் இருப்பவரே....!
சலங்கைகட்டி ஆடிடுவார் சாதனைகள் படைத்திடவே
செந்தமிழில் கவியரங்கை சிறப்பாக நடத்திடவே....!
உலகாளும் தமிழ்மொழியை உயிராக நினைப்பவரே
உள்ளமதைக் கொள்ளைகொண்டு ஊர்போற்ற நீ வாழ்க!

# வையத் தலைமை கொள்

(எண்சீர் விருத்தம் - விளம் மா மா காய் )

தன்னல மில்லாத் தலைவன் தரணியாள்வான்
        தலைமையா யிருந்து தானு முழைத்திடுவான்...
முன்னணி யாக இருக்கச் செய்திடுவான்
        முழுமன தாக வந்து முன்னிருப்பான்
தன்னிறை வுகொண்டு தவறா துநடப்பான்
        தலைமக னாக என்றும் இருந்திடுவான்...
சினம்பட பேசா திருந்து சிறந்திடுவான்
        சிக்கலி லும்நேர்த் தியுடன் செயல்படுவான்....

பொதுவா யிருப்பான் பொறுப்பு டனிருப்பான்
        பொதுநலம் கொண்டு பணிகள் புரிந்திடுவான்...
ததும்பிடும் சொற்கள் கொண்டு திகைக்கவைப்பான்
        தத்தளிக் கும்யெங் களையும் காத்திடுவான் ...
மதுவையும் மாது வையும் விரும்பமாட்டான்
        மக்களின் மனதி லென்றும் நிலைத்திடுவான்....
எதுவுமே எனதில் லையென் றிருந்திடுவான்
        ஏற்றிவிட் டேயெங் களையும் வாழவைப்பான்

உதவிகள் புரிந்தே உயர்ந்தி டுவான்நாளும்
        உண்மையாய் இருந்தே ஊருக் குழைத்திடுவான்...
முதல்வனாய் மூத்த வனாக இருந்திடுவான்
        மூத்தவர் சொல்லக் கேட்டு நடந்திடுவான்
புதல்வனாய் நின்று புவியில் ஆட்சிசெய்வான்
        பக்கப லமாக இருந்து பாதுகாப்பான்....
பதுமையாய் பாசத் துடனே வழிநடத்துவான்
        பேதைமை கொண்டு மனித னாயிருப்பான்

# அம்மா

( ஆசிரியப்பா )

பத்து மாதம் பத்திய மிருந்து
முத்தாய்ப் பெற்று முத்த மிட்டாள்
தத்தித் தவழ்ந்தேன் தத்தித் தாவி
நித்தமும் நடந்தேன் நித்திரை கொண்டேன்
நடைபயி லவேநீ நடையாய் நடந்தாய்
தடையில் லாமல் விடையாய் நின்றாய்
பாசம் கொண்டு நேசம் வளர்த்தாய்
வேச மில்லா வாசம் தந்தாய்
இன்பம் தந்தே இன்னலை
என்றும் தராத அன்னை நீயே...!

# அம்மா

( அறுசீர் விருத்தம் )

( விளம் - மா - தேமா )

அன்பினில் உதித்தாய் நீயே
அகிலமே போற்றும் தாயே
உன்னிலே நானும் வந்தேன்
உயிரையும் பெற்றேன் வாழ்வேன்
என்னுயி ரென்றும் ஆனாய்!
எழிலுயிர் உனக்கு நானே!
தன்னல மில்லாத் தாயே!
தங்கமாய் வந்தாய் நீயே!

# விழிப்புட னிருப்பாய்

( வெளிவிருத்தம் - மா மா விளம் மா )

மதுவைக் குடித்து மயங்கிவி டாதே - ஆசையினால்
விதவை யாக்கி விட்டுவி டாதே - ஆசையினால்
எதுவும் நடக்கும் எச்சரிக் கைகொள் - ஆசையினால்
விதும்பல் கொண்டே விழிப்புட னிருப்பாய் - ஆசையினால்

# கழனியில் நின்று காத்திடுவான்

( நேரிசை ஆசிரியப்பா )

உழுதிடும் உழவனை உலகம் போற்ற
தொழுதிடு வோமே தினம்தினம் தெய்வமாய்
புழுதியில் விதைகளை புதைப்பான்
கழனியில் நின்று காத்திடுவான் நம்மையே....!

# முத்தமிழே...

நேரிசை வெண்பா

■

முத்தமிழைக் கற்க முழுமனதாய் நான்வந்தேன்
தத்தித் தவழ்ந்தேன் தமிழ்த்தாயே - சொத்தாக
என்நாவில் வந்திடுவாய் ஏற்றுக என்னையும்
இன்பா இயற்ற இயைந்து....

■

கற்ற தமிழைக் கருத்தாய் எழுதுவேன்
சுற்றவரும் போற்றிப் புகழவே - பற்றோடு
பொற்றமிழிற் பாச்சாற்றி மாண்பாய் விளங்குவேன்
உற்றாரும் போற்ற உணர்ந்து....

■

உணர்ந்து நடப்பேன் உறுதுணையாய் வருவாய்
கணப்பொழு தும்மறவேன் தாயே - கொணர்ந்து
வருவேன் தருவாய் வழித்தடத்தை நீயும்
தருவேன் சுவையாய்த் தழைத்து....

■

சிந்தையில் வந்துதித்த சீர்மிகு செந்தமிழே
தந்தையுமாய் வந்தாய்நீ தண்டமிழே -சந்தனமே
உன்புகழ் பாடி உலகத்தைச் சுற்றுவேன்
என்றுமென் நாவில் எழு...!

■

மூத்தோ ருரைத்த முதன்மை மொழிநீயே
மூத்தவரும் தாள்பணியும் முத்தமிழே - மூத்தவளே
சாத்திரம் ஆயிரம் சாதித்துக் காட்டிநானும்
பாத்திரம் ஆவேன் பணிந்து....

■

முத்தாய் வருவாய் முதுதமிழ் தாயுனையே
நித்தமும் கற்றிடுவேன் நின்னையே - முத்தமிழே
சத்தமில்லா துகற்க சரளமாய் வந்திடுவாய்
முத்தமிட்டே வாழ்வேன் மகிழ்ந்து ....!

■

தித்திக்கும் செந்தமிழே திக்கெட்டும் ஒலித்திடுவாய்
சத்தமின்றி வந்தாய்நீ சாதிக்கவே - முத்தமிழே
சத்தமில்லா தொருயுத்தம் செய்திடவே வருவாய்நீ
முத்தமிட்டு வாழ்வேன் மகிழ்ந்து...!

■

சொத்தாக வந்தேநீ சொந்தமானாய் செந்தமிழே
எத்திக்கு மெங்கும் எழுவாய்நீ - முத்தமிழே
சத்தியம் செய்வேன் சரித்திரம் கொள்ளவே
முத்திரைக் காண்பாய் முடித்து...!

■

கத்தியின்றி ரத்தமின்றி காப்பே னுனைநானே
புத்தியோடு பாடிப் புகழ்வேனே - முத்தமிழே
தத்திநான் வந்தே தவழ்ந்திடுவேன் உன்னிடமே
மத்தளம் தட்டி மகிழ்ந்து....!

■

யுத்தம் புரிந்திடுவேன் யுக்தியை கையாண்டே
சித்த முடனே சிறப்பாக - முத்தமிழே
தத்துவம் சொல்வேன் தவறாமல் கேட்டிடவே
நித்தமும் உரைத்திடுவேன் நினைத்து....!

■

காத்திடு வேனுனையே கன்னித் தமிழ்த்தாயே
காத்தவரா யன்போலே காத்திடுவேன் - முத்தமிழே
காத்திருந்தே யுனையும் கரைசேர்த் திடுவேனே
காத்துக் கிடப்பேன் கனிந்து ....!

■

மூத்தோ ருரைத்த முதன்மை மொழிநீயே
மூத்தவரும் தாழ்பணியும் மூத்தவளே - முத்தமிழே
பாத்திரமா யாவேன் பருகிட உன்னையே
சாத்திரம் கொண்டு சரிந்து....!

## கந்தா சரணம்

( எண்சீர் ஆசிரிய விருத்தம் )

புளிமா - புளிமா - புளிமா - புளிமா

மலைமீ தமர்ந்த மகேசன் புதல்வா
மயில்மீ தமர்ந்தே வருவாய் முருகா...!
சிலையா கநிற்பாய் சிரிப்பு டனேநீ ....
சிறப்பாய் அருளைத் தருவாய் குமரா...!
தொலைவில் இருப்பாய் நினைத்தால் வருவாய்
தொழுவேன் உனையே தொடர்ந்தே அருள்வாய்...!
மலைக்கும் அழகே கருணைக் கடலே ....
மனதில் நினைத்து மகிழ்வேன் இறைவா...!

## மனைவி

( எண்சீர் ஆசிரிய விருத்தம் )

காய் - காய் - மா - தேமா

மூன்றெழுத்து மந்திரமாய் வந்தாய் நீயே ....
முழுமனதை ஆட்கொண்டே நின்றாய் நீயே...!
காணுபொருள் யாவிலுமே உன்னைக் கண்டேன்
கருத்தாக வந்தேநீ ஆட்சி செய்தாய்...!
வான்புகழை ஈட்டிடவே வந்தாய் மானே ....
வளமான வாழ்வையுமே தந்தாய் தேனே...!
மான்போல துள்ளிவிளை யாடி யென்றும் ....
மகிழ்வுதனை தினம்நல்கிச் சிறப்பாய் வாழ்க!

## அப்பா

(அறுசீர் விருத்தம்)

காய் - மா - தேமா

ஆசையாக பெற்றாய் என்னை
ஆசியோடு வளர்த்தாய் நீயே...!
மீசைக்கா ரநண்ப னாக
மீளாத இன்பம் தந்தே...!
ஓசையோடுக் கற்றுத் தந்தாய்
ஒற்றுமையாய் வாழச் செய்தாய்..!
ஆசைகளை மறைத்துச் சென்ற
அற்புதமே வாழி வாழி...!

## தமிழால் உயர்வோம்

( எண்சீர் விருத்தம் )

காய் காய் மா தேமா

செந்தமிழே நின்சிறப்பைக் கற்று வந்தேன்
செவிகொடுத்துக் கேட்டிட்டேன் சிறப்பாய் நானே...!
ஐந்துமுகத் தோனைகண்டே வந்தேன் நானே
ஐயம்தீ ரப்பணிந்தே பாடி வந்தேன்...!
பைந்தமிழில் கவிபாடக் கற்றே தந்தேன்
பாவினத்தில் தவறிருப்பின் காத்த ருள்வாய்...!
சிந்தையுடன் சிறந்துவிளங் கிடவே என்னை
சிறப்புடனே வாழச்செய் வாய்நீ தாயே...!

# விதியைத்தான் வென்றிடலாம்

( அறுசீர் விருத்தம் - காய் காய் தேமா )

விதியைத்தான் வென்றிடலாம் வாவா
விடியலைத்தான் தேடிடுவோம் வாவா...!
மதியாலே காலத்தை வென்று
மனத்தினிலே நிறைந்திடலாம் நன்று ...!
விதியாலே நடந்ததென்று பேசி
வீதிக்கு வாராமல் யோசி...!
முதியோரின் சொல்கேட்டு வாழ்வாய்
முன்னேறி தாரணியை யாள்வாய்...!

வாழ்க்கையெனும் சக்கரத்தில் நாமும்
வளமாய்தான் வாழ்ந்திடுவோம் நாளும்...!
தாழ்வென்னும் எண்ணமெல்லாம் வேண்டா
தரமில்லா மானிடனும் உண்டா...!
ஆழ்கடலின் பேரலையாய் வந்து
ஆட்கொள்வாய் அன்பையெல்லாம் தந்து...!
வாழ்முறையில் வாழையாக வாழ்வோம்
வந்திடுமே நலமெல்லாம் வாழ்வில் ...!

காலமெல்லாம் சிறப்பாக வாழ்வோம்
காத்திருந்தே வாழ்க்கைதனில் வெல்வோம் ...!
ஆலமரத் தைப்போல்தான் வாழ்வு
ஆகாதே விதியையென்னி தாழ்வு...!
காலாட்டி வாழ்வோமே நாமும்
கற்கண்டாய் இனிப்போமே நாளும் ...!
வாலாட்டும் விதிதன்னை கொல்வோம்
வளமாகும் வாழ்க்கையென்று சொல்வோம் ...!

எதுவந்துச் சேர்ந்தாலும் என்ன?
எல்லாமே நன்மைக்காம் என்போம்!
மதுபின்னே போகாதே நம்பி!
மதியைத்தான் இழக்காதே தம்பி!
விதியெல்லாம் வெறுங்கூச்ச லாக்கு!
விளையாட்டாய் உதைத்ததனைப் போக்கு!
மதியொன்றே விதிதன்னை வெல்லும்!
மறவாதே விதியெல்லாம் பொய்யே!

# நான் விரும்பும் என்முகம்

( எண்சீர் விருத்தம் - காய் காய் மா தேமா )

இன்னல்கள் பலவந்தே என்னைச் சாய்க்க ....
ஏற்றவையைச் செய்தொன்றி யிருந்தா லென்ன....!
என்னுள்ளம் என்வழியே நடந்தா லிங்கே ....
எவ்விடரு மெனைச்சாய்க்க இயலா தென்பேன்....!
தண்டமிழின் பாதையிலே நானும் செல்வேன்
தனித்தமிழை மீட்டெடுக்க உறுதி கொள்வேன் ....!
வண்டாக மண்டுகளுங் கூடி வந்தால் .....
வாய்க்கரிசி போட்டிடவே ஆவல் கொள்வேன்....!

தமிழுக்கோர் இழுக்கொன்று நேர்ந்தால் தன்னந்
தனியாக நின்றேகாத் திடுவேன் நானே...!
நிமிடங்கள் கூடயராப் பாடு பட்டே ....
நிமிர்ந்தேநின் றிடுவேனே தமிழைக் காக்க....!
உமிழ்நீராய் சுரப்பதுபோல் எ ன்னுள் வந்த .....
ஒண்டமிழைக் கற்றிடவே ஆவல் கொண்டேன்....!
திமிராக உரைத்திடுவேன் தமிழன் என்றே ....
தித்திக்கும் தமிழ்ப்பாலைப் பருகி வந்தே...!

சங்கம்வைத் தேவளர்த்த தமிழை எந்தச் ...
சங்கடமும் நேராது காப்பேன் நானே...!
அங்கமெல்லாம் நிறைந்துள்ள தமிழின் பிள்ளை
ஆண்மகனாய் நானிருப்பேன் அருகி லென்றும் ...!
தங்கமொழி தரணியாள முனைப்பாய் சொல்வேன்
தமிழ்மொழியும் வாழ்கவென்றே முழக்கம் கொள்வேன்....!
மங்காத புகழுடனே வளரச் செய்வேன்
மயக்குகின்ற வண்ணத்த மிழ்சொல் லாலே....

நயமாகப் பேசிவரும் ஆட்க ளுக்குள் ....
நரியாரை இனங்காணும் உள்ளங் கொண்டால் ...!
துயரில்லை இடரில்லை துன்ப மில்லை ....
துடைப்பத்தைப் போல்வாழும் நிலையு மில்லை...!
இயன்றதையெம் மினத்திற்குச் செய்து வாழும்
இன்முகமே எமக்கென்றும் வேண்டும் வேண்டும் ...!
அயலாரா லிடருற்ற இனத்தை மீட்க ....
ஆவலுற்ற ஒருமுகமே எவர்க்கும் வேண்டும்...!

# கலைஞர் இரங்கல் பா

( எண்சீர் விருத்தம் )

திருக்குவளை நாயகனே செந்தமிழின் தலைமகனே
திக்கெட்டும் ஒலித்தாயே முத்தமிழின் பெருமையையே...!
திருவாரூர் தந்திட்ட தங்கத்தேர் நீதானே
தொடர்பயணம் வந்தாயே தொய்வில்லா மல்நடந்தே...!
திருப்பங்கள் செய்திடவே தலைநகரம் வந்தாயே
திட்டங்கள் தீட்டினாயே தமிழினத்தின் மக்களுக்கே...!
திரும்பவந்தே திருப்பங்கள் செய்திடுவாய் தலைவாநீ
தமிழகமே தள்ளாடு தேநீயில் லாததாலே....!

சிங்காரச் சென்னையுமே சிறந்ததுவே உன்னாலே
சிறப்புடனும் சீர்மிகுந்த எழிலான துன்னாலே...!
பங்குபோட எவர்வரினும் பக்குவமாய் நின்றாயே
பாங்குடனே ஆட்சியையும் நடத்திட்டு சென்றாயே...!
பங்கமில்லை உனதாட்சி யிலேஏழை எங்களுக்கே
பாசமுடன் இருப்போமே என்றென்றும் உங்களுக்கே...!
தங்கமேநீ எங்குசென்றாய் எங்களையும் தவிக்கவிட்டு
தரணியாண்ட மன்னவனே தவிக்கவைத்தாய் உயிரைவிட்டு...!

கண்ணீரைக் காணிக்கை யாக்குகின்றோம் உனக்காக
கதிரவனே கலங்காது கண்ணுறங்காய் எனக்காக...!
விண்ணுலகம் சென்றுவிட்டாய் விந்தைகள்ப லபுரிந்தே
விடியுமுன்னே பறந்துவிட்டாய் எங்களையும் நீபிரிந்தே...!
மண்ணாண்ட மன்னவனே மகேசனாக வந்தாயே
மக்களோடு மக்களாக மனத்தினிலே வாழ்ந்தாயே...!
மண்ணுலகம் போற்றிடவே மீண்டும்வா தலைவாவா
மன்னவனா யாட்சிசெய்ய மீண்டும்வா தலைவாவா....!

# உளம் நாடும் முத்தமிழே....

( எண்சீர் விருத்தம் - காய் காய் காய் காய் )

எழில்பொங்கும் செந்தமிழே எழுச்சிமிக்க எம்மொழியே
என்றென்றும் வீழ்ச்சியில்லை தரணியிலே தாழ்ச்சியில்லை...!
ஒழிந்துபோன மொழிகளெலாம் ஆயிரமாம் அத்துனையும்
ஒண்டமிழின் முன்னாலே தலைகுனியும் எப்போதும்....!
அழியாத முத்தமிழே என்றென்றும் தாயன்றோ
அவனியிலே உள்ளவைகள் அத்துனையும் சேயன்றோ....!
இழப்பில்லா என்தமிழின் வளமான வளம்நிலைக்கும்!
இன்னிசையே இலக்கியமே நயமிக்க என்தமிழே...!

முறையாக வளர்ந்திட்ட முத்தமிழே முச்சங்கம்
முழுதாக வளர்ந்திட்ட என்தாயே முதல்தமிழே....!
பிறையாக வளர்ந்துன்னைப் பாடிவந்தே பெருமைகொண்டு
பெரியோரை வியக்கவைத்துப் பாராட்ட வைத்திடுவேன்...!
கறையின்றிக் காப்பியங்கள் கருத்தாகக் கற்றிடுவேன்
கலைகளையும் கற்றிடுவேன் கருத்தாக வடித்திடுவேன்
மறையாக வந்தாளும் வடிவான முத்தமிழே
வழிவழியாய் வளர்ந்துவரும் ஏற்றமிகு செந்தமிழே...!

வாய்ப்புகளும் விரிந்தோடும் நல்விடிய லாயென்றும்
வந்தினிமேல் மாறிவிடும் காட்சிகளும் மாறிடுமே....!
சாய்வின்றி உலகினிலே உயர்ந்திட்ட உன்னதமே
தளராமல் நிலைபெற்றே அரியணையில் அமர்ந்தாயே...!
ஓய்வறியாப் பகலவனே உளம்நாடும் முத்தமிழே
உயிர்மொழியே உனையென்றும் மறவாமல் போற்றிடுவோம்
தாய்க்குநிகர் நீதானே தண்டமிழே உனையென்றும்
தடம்பதித்தே வாழவைப்போம் ஏற்றமிகு செந்தமிழே....!

# வானம் தொட்டுவிடும் தூரம்தான்

( எண்சீர் விருத்தம் - காய் காய் காய் விளம் )

துயரத்தை விடுத்தேநீ செயல்படவே வேண்டுமே
துரிதமாக துணிந்தேநீ பயணிக்க வேண்டுமே....!
உயரத்தை தொடவேநீ உழைத்திடவே வேண்டுமே
உள்ளத்தூய் மையுடனேநீ உண்மையாக இருக்கவே....!
பயம்கொண்டு வேலையென்றே வாழ்க்கையென வேண்டுமே
பாரினிலே வலம்வரவே நம்பிக்கை வேண்டுமே...!
சாயத்தின் சதியிலுமே வண்ணமாக வேண்டுமே
சாதுரிய மாகவேநீ சாதிக்க வேண்டுமே.....!

முயற்சியொன்றே மூலதனமாய் முடிந்தவரை முயன்றிடு
முயன்றுநீயும் முழுமூச்சாய் பயிற்சிபெற்றே வென்றிடு..!
அயராது ழைத்தாலே பெற்றிடலாம் வெற்றியை
அகந்தையில்லா மல்பாடு படுவெற்றி உன்கையில்....!
உயர்ந்திடுவாய் எந்நாளும் உண்மையாக உழைப்பதால்
ஊரறியும் உழைத்துழைத்து முன்னேறி தழைப்பதால்....!
பெயரையுமே பெற்றிடுவாய் புகழையுமே உன்வசம்
பெற்றோரும் மற்றோரும் இனிஎன்றும் நம்வசம்....

சிகரத்தை தொட்டுவிடும் எண்ணமென்றும் வேண்டுமே
சிந்தனையோ டுசெயல்படல் என்றென்றும் வேண்டுமே...!
முகம்சுழிக்கா துசெய்திட்டால் முக்காலம் நம்மிடம்
முயன்றேநீ பணிந்திட்டால் மூவுலகம் நம்மிடம்....!
அகத்தூய்மை கொண்டேநீ ஆளவேண்டும் பூமியை
ஆண்டவனும் துணையிருப்பான் வணங்கிடுநீ சாமியை...!
பகையாளி யாயினுமே பாசத்தால் வீழ்த்திடு
பாங்குடனும் நேசம்கொண் டேயுழைத்து வென்றிடு.....!

# பாலியல் தொல்லைகள்

( எண்சீர் விருத்தம் - மா காய் மா காய் )

உள்ளம் கொதிக்குதடா உன்னை நினைக்கையிலே
உயிரும் நடுங்குதடா உன்னை பார்க்கையிலே...!
கள்ளப் பார்வைகொண்டே பழகும் மிருகங்களை
கண்டு வெட்கமாக இருக்கு தடாமனிதா...!
துள்ளும் மழலையிடம் என்ன கண்டாயோ
துள்ளி விளையாடும் மகளைப் பார்த்தாயோ...!
அள்ளி அணைத்திடவே ஆசை வேண்டுமடா
ஆசை தீர்ப்பதற்கு மழலைத் தேவையாடா....!

குற்றம் புரிந்தவனைக் கொண்டு செல்லுங்கள்
கூண்டில் அடைத்தவனின் குறிய யறுத்திடுங்கள்...!
சற்றும் யோசிக்கா மாலே செய்திடுங்கள்
சட்டம் இயற்றுங்கள் கடுமை யானதாக
உற்றுப் பார்க்கட்டும் ஊரார் இவர்களையே
உலகம் வியக்கட்டும் நம்மின் சட்டமதை...!
மற்ற வர்களுக்கும் பார்க்க வேண்டுகிறேன்
மனித னாகவாழ இறையை வேண்டுகிறேன் ....!

# பேசப்படும் மொழியே வாழும்

(எண்சீர் விருத்தம் )

காய் காய் காய் மா

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் உயிராகப் பற்றி
உயிரினிலே கலந்திட்ட தாய்மொழியைப் போற்றி... !
பயிராக பாக்களையும் படைக்குமொழி நீயே
பட்டொளியாய் பறந்துநீயும் வீசிடுவாய் தாயே...!
ஞாயிறாக வெளிச்சத்தை தந்துதமிழ் வாழும்
ஞானிகளும் சூளுரைத்த அன்னைமொழி ஆளும்...!
ஆயிரமா யிரம்பாக்கள் தந்தமொழி தானே
அவனியாண்ட மொழிகளிலே சிறந்ததுவும் தானே ...!

விலாசமெல்லாம் தேவையில்லா விரிந்தமொழி நின்று
விழாக்கோலம் பூண்டெழுந்த வியன்மொழியாம் இன்று...!
இலக்கணங்கள் வகுத்திட்ட செந்தமிழே தாயே
இமயத்தை தாண்டிநின்று இயங்குவதும் நீயே ...!
கலங்கமில்லா தாய்த்தமிழும் நீதானே என்றும்
கற்பூர சோதியாக ஒளிதருமே நின்றும் ....!
உலகையாளும் மொழிகளுக்கே சிறந்தமொழி நீயே
உணர்விலூன்றி உணர்ச்சிபொங்க உயிர்மொழிநம் தாயே...!

# மறுவாழ்வு

(வெண்பா )

விடியலில் ஆதவனும் விழித்தெ ழுகிறான்
மடியும் ப(உ)யிர்களுக்கு மறுவாழ்வு தந்திடவே
உழைப்பின் பலனை உணர்ந்தே எந்நாளும்
உழைத்தே வாழ்ந்திடுவோம் உலகம் போற்றிடவே..!

# தடம்பதிக்க வா

(வெண்பா )

கடமையென யெண்ணியே காலம் கழித்து
முடமாகி வீட்டில் முடங்கி விடாதே
தடம்பதிக்க வந்தால் தரணியாள் வாயே
விடலையே நீவா விரைந்து....!

# பயணம்

(எண்சீர் விருத்தம் )

காய் - மா - மா - மா

நினைவுகளை நெஞ்சில் சுமந்து பயணம்
நினைத்தவுடன் அருகே வருதே தருணம்...!
என்னையுமே திரும்பி பார்க்கச் செய்தாய்
எதிர்பார்த்தே என்னைக் காக்க வைத்தாய்...!
என்னருகே வந்து இயல்பாய் நின்றாய்
எண்ணத்தில் சேர்ந்தோம் ஒன்றாய் நிறைவாய்
உன்விரலால் விரலும் கோர்த்துப் போனாய்
உள்ளத்தைத் தந்தே உயிரு மானாய்....!

# தேர்தல்

(எண்சீர் விருத்தம் )

காய் காய் மா தேமா

சிரித்துப்பேசி வந்திடுவார் ஓட்டு வாங்க
சில்லரையை வீசிவிட்டுச் செல்வார் போங்க...!
வரியேய்ப்பு செய்தவனும் வருவான் பாரு
வீதிக்கு நமையுமழைத் துண்பான் சோறு ...!
உரிமையாக ஒட்டுகேட்டு வருவான் முன்னே
உதவிகளும் செய்வதாக சொல்வான் கண்ணே...!
விரிவாக உரைத்திடுவான் தெருவில் நின்று
வெற்றிபெற்றே ஓடிவிடுவான் நம்மைக் கொன்று ...!

உண்மையான தலைமையைத்தேர்ந் தெடுத்துக் காட்டு
உரிமையாக போடுவோமே நாமும் ஓட்டு...!
எண்ணம்போல் இனியேற்றம் பெறுவோம் நாமும்
எழுந்துநிற்போம் குனியாதி னிமேல்நீ நாளும்...!
வண்ணமான வாழ்க்கையுமே வாழ்வாம் என்று
வாழ்நாளை வளமாக்கு சிறப்பாய் இன்று ...!
எண்ணமெலாம் தெளிவாக்கி வாழ்ந்தோ மானால்
இனிக்கின்ற விடியலைநாம் அடைய லாமே...!

# தமிழ் வருடப்பிறப்பு

( எண்சீர் விருத்தம் - காய் மா காய் தேமா )

சித்திரையே நிலவே சிறப்புடனே வாவா
சிரித்தமுகம் கொண்டு சீரோடு வாவா ...!
இத்தரையில் மாந்த ருக்கின்பம் தாதா
இன்னல்கள் தீர்க்க இசைந்தசைந்து வாவா....!
முத்திரைப்ப திக்க முழுமனதாய் வாவா
முற்பிறவிப் பலனை முந்திவந்து தாதா ....!
நித்திலமாய் வந்து நிம்மதியை தாதா
நின்புகழை நானும் பெற்றிடவே வாவா

# கனவு மெய்ப்பட வேண்டும்

அன்பினாலே அகிலத்தை ஆள வேண்டும்
அன்புகொண்ட நெஞ்சமாக வாழ வேண்டும்...!

ஆசைபடும் எண்ணங்கள் நடக்க வேண்டும்
ஆளும்தி றன்கொண்டே ஆள வேண்டும்...!

இயலாதோ ரில்லாத உலகம் வேண்டும்
இல்லாதோ ரில்லாத நிலையும் வேண்டும்...!

ஈகைநிறை குணம்நிறைந்து வாழ வேண்டும்
ஈசனைநாம் போற்றித்தான் பாட வேண்டும்...!

உறவுகளாய் கைகோர்த்தி ருக்க வேண்டும்
உயிராக யென்றுமிருந் திடவே வேண்டும் ....!

ஊரார்முன் வியந்திடவே வாழ வேண்டும்...!
ஊக்கத்தோ டேயுலகைச் சுற்ற வேண்டும்...!

எண்ணங்கள் யாவும்செ யலிலே வேண்டும்
என்றென்றும் முன்னேறிட துடிக்க வேண்டும்...!

ஏணிப்ப டியாகயேற்றம் காண வேண்டும்
ஏங்கும்வாழ் கையில்லாத நிலையே வேண்டும்...!

ஐந்துமுகத் தோணைத்தொ ழுதிட வேண்டும்
ஐயமின்றி எந்நாளும் இருக்க வேண்டும்...!

ஒன்றுபட்டே வாழ்வினிலே உயர வேண்டும்
ஒற்றுமையும் நம்வாழ்வில் வேண்டும் வேண்டும்...!

ஓங்காரப் புகழ்பெற்று மகிழ வேண்டும்
ஓதுமறை யேநமக்கு நெறியாய் வேண்டும்...!

ஔவைதந்த செந்தமிழைக் கற்க வேண்டும்
ஔவைவழி நடந்திடவே முயற்சி வேண்டும்...!

அஃதேவாழ்வின் நெறியெனவே வாழ வேண்டும்...!
இஃதேநம்மின் கனவுமெய்யா கிடவே வேண்டும்...!

# ஒற்றுமை யுடனே இருப்போமே

( ஆசிரியப்பா )

துள்ளும் உள்ளமே துவளாச் சித்திரமே
கள்ளமில் லாக்கருணைக் கடலே கண்மணியே..!
அன்பு கொண்டவளே அழகு பதுமையே..!
உன்னிலை யறியாத உண்மைப் பேதையே...!
மரகத மணியே மங்காத செல்லமே...!
தரமறிந் துவந்த தங்கத் தாரகையே...!
குறும்புச் சிரிப்பின் குணவதி நீயே..!
நறுந்தமி ழேயென் நாதமா னவளே....!
பஞ்சம் வந்தும் பசியறிய வில்லையே..!
நெஞ்ச மெல்லாம் நீயாகிப் போனதாலே...!
அடம்பிடித் தேயெனை ஆட்கொண் டவளே..!
உடன்பிறக் கவில்லை உயிராய் வந்தவளே..!
ஒற்றுமை யுடனே ஒன்றாய் இருப்போமே..!
பற்று கொண்டே பாரினில் வலம்வருவோமே...!

# ஆனந்த தாண்டவம்

( ஆசிரியப்பா )

ஆனந்தம் மனதினில் ஆனந்தம் உன்னாலே...!
என்றன் மனதினில் என்றும் நீதானே...!
கைபிடித்த யென் கண்ணாளா மணவாளா...!
பித்து பிடித்து பித்தம் தெளியவைத்தாயடா....!
ஆனந்த தாண்டவமதிலே ஆயுளும் கூடுதடா...!
மனசு கொஞ்சம் மணவாளனே நீவாடா....!
ஆதியும் நீயே அந்தமும் நீயே...!
சோதித்தே என்னை சோதனை செய்தாயடா....!
கணநேரம் சந்திப்பில் கண்ணியம் காத்தாயடா...!
என்னமெல்லாம் நீயாகி ஏங்க வைத்தாயடா...!
கைபிடித்த நேரம் கைநழுவி போனதேனடா...!
பிடிக்காதது போல் பிரிந்த தேனடா...!
பறவை போல் பறந்தே
உறவாய் வந்து உயிராய் ஆனதேனடா...!

# மென்சுகமே வா

( வெண்பா )

நான்தானே எந்நாளும் நன்மை தருகின்ற
தேன்சொட்டும் பூவாவேன் தென்றலே - வான்மழையாய்
மஞ்சத்தில் நான்விரும்ப மாலையிட வாவாவா
நெஞ்சத்தின் மென்சுகமாம் நீ

# அழகே வா

( வெளிவிருத்தம் )

கண்ணே மணியே கலைமகள் நீயே - அழகேவா
வண்ணம் கொண்ட வானமாய் வந்த - அழகேவா
எண்ணம் நிறைந்த இனியவள் நீதானே - அழகேவா
பண்பாடு நிறைந்து பாசம் கொள்ளும் - அழகேவா

# இயற்கை

வஞ்சி விருத்தம்

தேமா புளிமா தேமாங்காய்

வானில் நிலவு வந்தாலே
காணு மழகு கொண்டாட்டம்
தோன்று மிடமும் தேடித்தான்
கண்ணில் உனையே காண்கின்றேன்

# நினைவுகள்

( குறள் வெண்செந்துறை

தூங்கா விழிகள் தூரம் செல்லுதே...!
நீங்காத நினைவுகள் நித்தமும் சுமந்தே...!

பற்றிய கரத்தை பாதியில் விடாதே
கற்கண்டு தந்தே கனிவாய் பேசியே..!

அருகே அமர்ந்தே ஆறுதலாய் பேசியே
உருகிய உள்ளமதை உயிராய் தந்தாயே...!

கண்பேசி யமொழி காந்தமா யீர்க்கவே
கண்க வர்ந்தே காட்சி தந்தாயே...!

விடியல் தேடும் விட்டில் பூச்சியாய்
துடிக்கும் இதயம் தூக்கிச் சென்றாயே...!

திருடிய இதயத்தைத் திருப்பி தந்துவிடு
விருப்பம் போல விளையாடி மகிழ்வோமே....!

# கன்னத்தில்முத்தம்கொடு

அன்பை நீயும் அள்ளித் தந்தே
அன்னைப் போல வாழ்வாய் நீயே..!
என்றும் என்னை ஆட்கொண் டேநீ
எண்ணம் போல வாழ்வாய் நீயே..!
மின்னும் பொன்னாய் எந்நா ளும்நீ
மின்னல் போல மின்னு வாயே...!
கன்னல் பார்வைப் பார்த்தே நீயும்
கன்னத் தில்முத் தம்கொ டுப்பாய்...!

# ஆசான்

( குறள் வெண்செந்துறை )

எழுத்தறி வித்த எங்க ளாசான்
முழுமதி யெனவே முந்திவந் தாரே..!

எண்ணும் எழுத்தும் எடுத்துரைத் தாயே..!
கண்ணியத் தோடு கற்றுத்தந் தாயே...!

அன்பைத் தந்தே அறிவைத் தருவார்..!
என்றுமென் வாழ்வி லென்ற னாசானே..!

பாட்டுப் பாடியே பாடம் நடத்துவார்...!
நாட்டம் கொண்டே நாமுமோ துவோம்...!

# ஒழுக்க மொன்றே உயிரெனக் கொள்வாய்

( நிலைமண்டில ஆசிரியப்பா )

ஒழுக்க மொன்றே உயிரெனக் கொள்வாய்
இழுக்கை உடையவன் எழுந்தோ டிடுவான்
நன்னெறி கற்கவே நாளும் நாடுவாய்
நன்றதைக் கற்றிடின் நாடதும் போற்றுமே
பண்பதிற் சிறந்தே பாரினி லுயர்வாய்
வண்ண மயமென வாழ்வது மாறுமே
உள்ள மதிலே உண்மையைக் கொண்டு
பள்ளம் நோக்கிப் பாய்ந்திடும் நீராய்
உள்ளத்தில் அன்பே உருகிட வாழ்வாய்
துள்ளித் திரிவாய் துவண்டி டாமலே....!

# தாயே நீயின்றி தானேது சக்தி

( குறள் வெண்செந்துறை )

உளிசெதுக் கும்கல்லாய் உருவம் தருவாயே
ஒளிதந்து உயிர்தந்து ஒளிரச்செய் வாய்நீயே..!

அம்மனை தொழுதிட ஆலயம் சென்றேனே..!
அம்மா யென்றே அழைத்தேன் அருள்வாயே..!

நீயேகதி யென்றே நின்பாதம் பணிந்தேனே..!
தாயே நீயின்றி தானேது சக்தியே...!

மலர்ச்சரம் சூடி மகிழ்ந்தே னுனையே..!
மலர்முகத் தாளே மண்டியிட்டு வணங்கினேனே...!

இருளைப் போக்கி இன்னலைப் போக்குவாயே..!
அருள்வாய் அன்னையே அருள்புரிவாய் நீயே..!

துள்ளும் உள்ளமே துவளாச் சித்திரமே
கள்ளமில் லாக்கருணைக் கடலே கண்மணியே..!

அன்பு கொண்டவளே அழகு பதுமையே..!
உன்னிலை யறியாத உண்மை பேதையே...!

மரகத மணியே மங்காத செல்மே...!
தரமறிந் துவந்த தங்க தாரகையே...!

குறும்புச் சிரிப்பின் குணவதி நீயே..!
நறுந்தமி ழேயென் நாதமா னவளே....!

பஞ்சம் வந்தும் பசியறிய வில்லையே..!
நெஞ்ச மெல்லாம் நீயாகிப் போனதாலே...!

அடம்பிடித் தேயெனை ஆட்கொண் டவளே..!
உடன்பிறக் கவில்லை உயிராய் வந்தவளே..!

ஒற்றுமை யுடனே ஒன்றாய் இருப்போமே..!
பற்று கொண்டே பாரினில் வலம்வருவோமே...!

# பாதம் தழுவாது பாதியில் திரும்பேன்

இணைக்குறள் ஆசிரியப்பா

மலையைக் கூடவே மண்ணாக் கிடுவேன்...!
அலைபோல ஆதிக்கம் செய்திடுவேன்...!
கரைதொடும் அலையாய் காத்திருப்பேன்...!
பாதம் தழுவாது பாதியில் திரும்பேன்...!

# முயற்சி

முயற்சி எடுத்தே முயன்றிடு என்றும்
பயிற்சி எடுத்தால் பெறுவாய் வெற்றி
அயரா துழைத்தா லகிலம் ஆளலாம்..!
செயலில் இறங்கிநீ செய்

# நன்றாய்ப் படிப்பாய்

( நேரிசை ஆசிரியப்பா)

கல்வியைச் சிறப்புறக் கற்றுத் தெளிந்திட
கல்லா மையொழிக்கக் கல்விகற்க வேண்டுமே
நல்லவை யாவுமே நன்றாய் படித்திடு
நல்லுள்ளம் போற்றிட நாளும் படித்திடு
என்றும் சிறக்க ஏதுவாய்
நன்றாய்ப் படிப்பாய் நிலைத்திடும் கல்வியே

# முருகா...!

( நிலைமண்டில ஆசிரியப்பா )

காத்திருந் தேனுனைக் காணவே முருகா...!
காத்தருள் வாய்நீ கந்தா கடம்பா...!
சோதியாய் வந்தே சோதனைத் தீர்ப்பாய்...!
ஆதியும் நீயே அந்தமும் நீயே...!
மலைமீ தமர்ந்தவா மகேசனின் புதல்வா...!
சிலையாய் நின்றவா சிங்கார வேலவா...!
காட்சி தந்தாய்க் கண்ணின் ஒளியாய்...!
சாட்சியாய் வந்த சண்முக நாதனே...!
குறைகளைந் தாயே குமர குருபரா...!
நிறைவாய்த் தந்தாய் நிம்மதி என்றுமே...!

# தந்திடுவா யுந்த னருள்

கந்தா கடம்பா கதிர்வேலா சண்முகா
சிந்தை யுடனே சிரிப்பாயே - எந்நாளும்
உந்தன் அருள்வேண்டி யுன்பாதம் நின்றேனே
தந்திடுவா யுந்த னருள்.

அழகன் முருகனே ஆறுபடை யோனே
குழந்தை முகமாய் குருவாய் வருவாய்க்
குறைகளை நீக்கும் குமரனே கந்தா
மறையாய் வருவாய் மகிழ்ந்து...!

கண்ணே மணியே கனியமுதே கற்கண்டே
கண்ணனே மன்னனே கார்மேகக் - கண்ணனே
எண்ணத்தில் நீயாகி என்னுள் ளிருப்பவனே
கண்ணா அருள்வாய்க் கனிந்து

கோவுடனே வந்தாயே கோபாலா நீயுமே
ஆவும் கடவுளானாய் என்றுமே -
ஆயர்பாடி நாயகா ஆனந்த தாண்டவா
தூயவா யருள்வாய் துணிந்து

# இல்லறம்

(இன்னிசை வெண்பா)

கண்ணெதிரே தோன்றினாய்க் கண்ணுக் கழகாக
எண்ணமெல் லாம்நிறைந் தென்னுள் வருவாயே
இல்லற வாழ்வில் இணைந்தே பயணிப்போம்
நல்லறமாய் வாழ்வில் நயந்து

மஞ்சள் முகமே மயங்காத செல்வமே
தஞ்சமென வந்தேன் தழைக்க - பிஞ்சுமுகம்
கொஞ்சி யணைத்திடக் கொள்ளை யடிக்கின்ற
நெஞ்சமே யென்றும் உனக்கு

நல்லவை யாவும் நலமா யுரைத்திட
வல்லவர் சொல்லே வரமாகும் - சொல்லது
கேட்டு நடந்தால் குறைந்திடும் பாரமே
நாட்டம் பெறுவாய் நளிந்து ....

கருவிழி யால்யெனைக் காந்தமாய் ஈர்த்தே
உருமா றியேவந் துயிர்தரு வாயே
தருவே னுனக்குத் தயங்கா தெனையே
பருகுவோம் இன்பம் பல ....

அள்ளிப் பருகிடத்தான் ஆசை அருந்தமிழே
துள்ளியோடு முன்னைத் துரத்துவேன்- கள்ளியே
எங்கிருந்து வந்தனையோ என்னவளே என்னுயிரே
தங்கிடுவாய் உன்னையுமே தந்து

உறவாக வந்தே உயிராக ஆனாய்
மறக்க வியலா மனமே - சிறக்கப்
பறக்கிறேன் நின்றனின் பாசத்தால் நானும்
சிறகை விரித்துச் சிரித்து ....!

காத்திருந் தேனுனைக் காணவே கால்கடுக்க
காத்திருப்ப தும்சுகமே கண்மணியே - பூத்திருக்கும்
பாவையே உன்னையுமே பார்த்திடவே
ஆசைகொண்டேன்
பூவையேநீ பார்த்திடடி பூத்து....

# செந்தமிழே

அறுசீர் விருத்தம் காய் - மா - தேமா

செந்தமிழே உன்னை நானே
செம்மைப்ப டுத்திப் பாட
பைந்தமிழில் சொல்லெ டுத்துப்
பாடிடவே வந்தேன் தாயே...!
தொந்திவிநா யகனை நல்கி
தொடுத்தேனே பாவை நானும்
சிந்தையுடன் சிறப்பாய் தந்தேன்
சீர்மிகுந்தே செம்மைப் பாவை...!

# குலதெய்வ வழிபாடு

எண்சீர் விருத்தம்

காய் - காய் - மா - தேமா

குலதெய்வ வழிபாடு குலத்தைக் காக்கும்
குறைவின்றி நலமாக நாமும் வாழ...!
நலம்காக்கும் இறைவனுமே நலத்தை நல்கும்
நலமாக நாம்வாழ வழிகள் செய்யும் ...!
கோலமயில் மீதேறி வருவான் கந்தன்
கொடையாக அளித்திடுவான் செல்வம் யாவும்...!
வேலனிங்கு வேலெடுத்து வருவான் பாரு
வேண்டுகின்ற வரமளித்துக் காப்பான் பாரு....!

## கள்ளமில்லா உள்ளம்

( எண்சீர் விருத்தம் )

கள்ளமில்லா உள்ளம் குழந்தையின் உள்ளம்
காண்போரின் கைகள் அணைத்திடும் என்றும்...!
பிள்ளைமுகம் பார்த்தால் பறந்திடும் துன்பம்
பார்த்துக்கொண்(டு) இருந்தால் வந்திடும் இன்பம்...!
கிள்ளைமொழி கேட்க உள்ளமும் துள்ளும்
கன்னமதைக் கிள்ள ஆசையாய் அள்ளும்...!
கொள்ளைகொள்ளும் அழகுப் பதுமையும் நீயே
குழந்தையாக வந்து தாயுமா னாயே...!

## கவியுலகின் காவலர்

( எண்சீர் விருத்தம்)

காய் - விளம் - காய் - விளம்

கவியுலகின் காவலர் காவியத்தின் நாயகர்
கற்றவர்கள் போற்றிடும் கவிதைகளின் மூலவர்...!
புவியாளும் மூத்தவா புரிதலிலே முன்னவா
புண்ணியங்கள் புரிந்தவா புவனத்தில் உயர்ந்தவா...!
கவிதைகளை எழுதவைத் தேகவிஞ னாக்கியே
காவியங்கள் படைக்கவா காற்றாக வந்தவா...!
பவித்திரமா யானவா பார்போற்றும் மன்னவா
பகுத்தறிவு படைத்தவா பக்குவமும் கொண்டவா...!

## மலர்களே மலர்களே

( எண்சீர் விருத்தம் )

விளம் விளம் விளம் விளம்

மலர்களே மலர்களே மயக்கிடும் மலர்களே
மங்கையர் சூடிடும் வாசனை மலர்களே...!
தலைதனில் சூடியும் தரணியை வெல்கிறாய்
தரமிகு நறுமணம் தருமிள மலர்களே...!
உலர்ந்துநீ தரையிலே உரசினால் மலர்களே
உதிர்ந்துதான் போகிறேன் உலகிலே நானுமே ...!
மலர்ந்ததும் வந்திடு மகிழ்ச்சியைத் தந்திடு
மன்னனைத் தேடியே மனத்தினில் வாழவே...!

## உளமாற வாழ்க

(அறுசீர் விருத்தம்)

புளிமா புளிமா புளிமாங்காய்

வருவாய் எனவே எதிர்பார்த்தேன்
விரைந்து தருவாய் அழகினையே...!
திருவாய் மலர்வாய் இதழ்போலே
தினமும் நகைப்பாய் குறும்பாலே ...!
உருகி யுருகி உறைகின்றேன்
உயிரும் தருவேன் உனக்காக...!
உருவம் தருவேன் உயிர்ப்பாக
உளமா றவாழ்க சிறப்பாக...!

# நிழலும் நீயே நிசமும் நியே

( ஆசிரியப்பா )

நிழலும் நீயே நிசமும் நியே
சுழலும் பூமியின் சுற்றமும் நீயே...!
ஆதியும் நீயே அந்தமும் நீயே
சோதியும் நீயே சொக்கவைப் பாயே...!

நீல வண்ணனே நீல கண்டனே
காலபை ரவனே கார்குழல் நாதனே
கங்கையைத் தலையில் சூடிய ஈசனே
மங்கைக்குப் பாதி மகிழ்வுடனே தந்தவனே..!

தமிழ்க்க டவுளின் தந்தையா யானவா
அமிழ்தமே ஈசனே ஆண்டவா சிவசிவா...
உமையவள் இடபாகம் கொண்டனே இறைவா
எமையுமே என்றும் காத்தருள் சிவனே...

# அம்மா

(அறுசீர் விருத்தம்)

மா - விளம் - காய்

நன்றி சொல்லிட வந்தேனே
நானும் அன்னையாய் வந்ததாலே
அன்பில் திகைத்திட வைப்பாயே
ஆசையாய் அள்ளிய ணைத்ததாலே
உண்ணும் உணவையும் பங்கிடுவாய்
உன்னை மறந்தெனக் களித்திட்டே
என்னை காத்திடும் திருவுருவே
என்றும் நானுனை மறவேனே....

## முத்தமும் தருவாள்

இணைக்குறள் ஆசிரியப்பா

கல்லும் கரைந்திடும் கடைக்கண் பார்வையில்...!
வில்லாய் வளைந்தே வருவா ளவளுமே...!
இதழோ ரம்மித ழினிக்கத் தந்திடு...!
மிதழதைச் சேர்த்தே யிரண்டறக் கலந்தே...!

கண்ணும் கண்ணும் கொள்ளை யடித்ததே...!
மண்ணுமீ ருயிராய் மகிழ்ந்த தாலே...!
சிலையும் சற்றே சிணுங்கியே தந்ததே...!
மலைத்திட வைக்கும் முத்த மொன்றையே...!

முத்தமும் தருவாள் மொத்தமாய் வந்தே
சித்தமும் கலங்கிடச் செய்வாள் சிரித்தே...!
மென்மையாய் வந்து மேனி யணைக்கவே
என்றன் மனமும் என்றும் ஏங்குதே...!

## தாய்

( அறுசீர் விருத்தம் )

தேமா தேமா தேமாங்காய்
தேமா தேமா புளிமாங்காய்

தாயே நீயே என்றென்றும்
தாங்கும் சக்தி படைத்தவளே
சேயாய் நானும் வந்தேனே
சேர்த்த ணைத்து மகிழ்வாளே
தாயே தெய்வம் தெய்வீகம்
தாயைப் போல உலகில்லை
தாயைப் போற்று எந்நாளும்
தாயு டன்இன் பமாய்வாழ்ந்து

## பிரிந்து முனையே பிரியா திருப்பனே

( இணைக்குறள் ஆசிரியப்பா )

மஞ்சள் வெயில் மாலைப் பொழுதினில்
தஞ்சமாய் சென்று தன்கால் பதித்தாள்...!
பிஞ்சுப் பாதம் பணிந்திட அலையும்
கொஞ்சிட வந்தே அஞ்சியே நனைத்ததே...!

கடலன் னையும் கச்சித மாக
உடல்ந னைத்தே உயிர் பெற்றாளே...!
ஆழ மெனவே அஞ்சியே வந்தே
மழலை யுனையும் மயக்கி னாளே...!

பாசம் கொண்டே பக்குவ மாக
நேசம் கொள்ள நெருங்கிவந்தாளே...!
ஆசையாய் உன்னை அணைத்திட வந்தே
பூசை செய்தாள் பூமக ளுனையே...!

தாயாய் வந்தே தந்தாய் மகிழ்ச்சியே
சேயாக நானும் விரிந்தவுன் னழகை....!
பிரிந்த தருணம் பிரியம னமில்லை
பிரிந்து முனையே பிரியா திருப்பனே....!

## உறவுகள் என்றும் தொடர்கதையே

அறுசீர் விருத்தம்

விளம் - மா - காய்

உறவுகள் என்றும் தொடர்கதையே
உண்மையில் அதுவும் விடுகதையே...!
உறவென வந்தே பேசிடுவார்
உருகிய பேச்சால் தாழ்த்திடுவார்...!
பிறப்பெனக் கூறிப் பிரிந்திடுவார்
பிரிந்ததும் நம்மேல் குறையிடுவார்...!
பறவைகள் போல பறந்திடுவார்
பழகிய பின்னே மறந்திடுவார்...!

# தேடல்

( அறுசீர் விருத்தம் )

காய் - மா - புளிமா

தேடலில்லா வாழ்க்கை கசக்கும்
தேடலொன்றே வாழ்க்கை இனிக்கும்...!
தேடத்தே டத்தான் கிடைக்கும்
தேடிக்கி டைத்த தினிக்கும்...!
ஓடம்போல் ஆடும் பயணம்
ஒருநாளில் சீரா யமையும்...!
பாடமாக வாழ்வைப் படிப்போம்
பட்டங்கள் பெறுவோம் தினமும்..!

புரியாத புதிராய்ப் புலரும்
புதியதாக வந்தே மலரும்...!
தெரிந்தேநா மும்செய் திடுவோம்
தெளிவுபெற்றே என்றும் நடப்போம்...!
விரிந்தவுல கினிலே பறப்போம்
விந்தையான உலகை அறிவோம்....!
சிரித்தேவாழ்ந் திடுவோம் சிறப்பாய்
சிந்தையுடன் வாழ்வோம் மகிழ்வாய்...!

# மழலை

( எண்சீர் விருத்தம் )

காய் மா காய் தேமா

மழலைமுக மென்றும் மங்காத செல்வம்
மறுமலர்ச்சி கண்டு மயங்காத செல்வம் ...!
குழந்தையாக வந்து குலம்தழைக்கும் செல்வம்
குன்றிலேற்றி நாளும் வணங்கிடவே வைக்கும் ...!
தழல்போல வந்து தணிக்கையுமே செய்யும்
தனியாக வந்தே தரணியையே ஆளும் ...!
குழல்போல இனித்துக் குடும்பத்தைப் பார்க்கும்
குலச்சாமி யாக வந்துநமைக் காக்கும் ...!

# திட்டங்கள்

( எண்சீர் விருத்தம் )

காய் மா காய் மா

திட்டங்கள் தினமும் தீட்டிடுவார் நன்றாய்த்
திண்டாட வைத்துத் திரும்பாமல் செல்வாய் ...!
சட்டதிட்டம் சரியாய் இருந்தாலே போதும்
சாதிகளும் இல்லை சண்டைகளும் இல்லை ...!
பட்சிகளும் உணவை பகிர்ந்துண்ணும் நாளும்
பாசமுடன் பிரித்துப் பசியாறிக் கொள்ளும் ...!
பட்டாடை வேண்டா பசிக்குணவு வேண்டும்
பட்டினியால் வாடி பசியைமறந் தோமே...!

# முருகன்

( வெண்பா )

ஆறு முகத்தோனே ஆதிசிவன் மைந்தனே
ஏறு மயிலேறும் ஏகாந்த வாசனே
வீறுநடைப் போடும் விநாயகன் தம்பியே
சீறி வருவாய்ச் சிரித்து...!

# தண்ணீராய் வந்திடு

( வெண்பா )

தேகமதைக் கொட்டிடும் தேளாய் இருக்காதே
தாகமதைப் போக்கிடும் தண்ணீராய் வந்திடு
மோகம் தவிர்ப்பாய் மோட்ச மடைவாயே
வாக்குறுதி தந்துநீ வா...!

# கண்ணன்

( வெண்பா )

கருமை நிறக்கண்ணா கார்குழல் மன்னா
திருவாய் வருவாய் தினமும் - பெருகும்
உனதருளை வேண்டி உளமாறக் கேட்பேன்
எனக்கருள் வாயே இசைந்து

# தென்னவன்

( வெண்பா )

புன்னகை சிந்தியே பூச்சூடிச் சென்றானே
மன்னவ னென்னை மயக்கியே - தென்னவன்
என்னையு மாளவே ஏங்கித் தவித்தானே
அன்றுபார்த்த பார்வையி னால் ...

# துணையாய் வருவேன் துணிந்து

( வெண்பா )

பிணையொன்று தந்தேன் பிடிபடாமல் சென்றாய்
துணையாய் வருவேன் துணிந்து - கணையாழி
சூட்டுவேன் நட்புறவும் சூழவந்து வாழ்த்திட
மாட்டுப்பெண் ணாய்வா மணந்து....!

# செந்தமிழ் வேலின் செருக்கு

( நேரிசை வெண்பா )

அருந்தமிழ்ப் பாடியே அன்னையாய் வந்தே
திருவை நிறைவாய்த் தருவாய்க் -கருணையனே
பைந்தமிழ்ச் சொற்கொண்டு பாட உதவிடுமே
செந்தமிழ் வேலின் செருக்கு...

# கல்வி

( வெண்பா )

கல்வி பயில்வாய் கவலை உனக்கில்லை
சொல்லில் புரிவாய் செயலை - பள்ளியிலே
கற்றதெலாம் மற்றவர்க்கும் கற்பித் திடுவாயே
கற்றவரே உற்றதுணைக் காண்

# மலர்தாமரை

( சிந்தடி வஞ்சிப்பா )

மலர்தாமரை யாயவள்முகம் மணம்வீசுதே
இலக்கணத்தமிழ் போலவளுமே இயற்கையழகில்
கலகலவென புன்னகையுடன் வந்துநின்றனள்
சலசலவென நீர்வீழ்ச்சியாய் பாய்ந்துவந்தனள்
அவளே
தன்னலம் கருதா என்னவள்
அன்பைக் கொடுத்தே ஆண்டன ளவளே

# காமாட்சியம்மன் பாடல்

( வெண்பா )

கற்பகத் தாயே கருமாரி அன்னைநின்
பொற்பாதம் போற்றிப் புகழ்வனே - அற்புதக்
காட்சி தருமென்றன் காமாட்சி தெய்வமே
மாட்சிமைக் கண்டேன் மகிழ்ந்து...

ஆலயம் சென்றேனே அம்மன் அருள்பெற
மாலைப் பொழுதில் மயங்கியே நின்றேனே
காத்திடும் அன்னையாய் காலமெல்லாம் வந்தாளே
ஏத்திடுவாள் என்றும் இசைந்து....!

# முத்தம் தருவாய் முனைந்து

( வெண்பா )

விழிபிதுங்கி நானும் விடியலைத் தேடி
மொழியறியாப் பிள்ளையின் மௌனமாய் - வழிமேல்
விழியாய் எதிர்பார்த்தே வீதியை நோக்கி
வழித்தடமாய் வந்து விடு....

முத்துப்போல் பல்லழகி முத்துச் சிரிப்பழகி
சித்திரையே வருவாய் சிவந்தே - நித்தமும்
சத்தமில்லா மல்வந்தே சாதனை செய்திடுவாய்
முத்தம் தருவாய் முனைந்து....!

# வழியென வா விழியே

விழியி னசைவில் விழுந்துவிட்டேன் நானும்
மொழியறி யாதவனாய் நின்றேன் - வழியாய்
வருவாய்நீ வாழ்வில் வசந்தம் பெறவே
தருவேனே என்னையும் தந்து....!

காத்திருந்த நேரமது கன்னியவள் வந்தாளே
சேர்த்தணைத்துப் போனாளே சொந்தமெனப் - பூத்திருந்த
பாவையும் நாணத்தால் பார்வைப் பறித்தாளே
பூவையும் சென்றாளே பார்த்து

உருகி யுருகியே உன்னைத் தொழுதேன்
பெருக்கிடு வாயே பெயரைத் - திருவே
சங்கடங்கள் தீர்ப்பாய் சமயத்தில் வந்தேநீ
அங்கமெல்லாம் என்னை அணைத்து...!

கண்ணெதிரே தோன்றினாள் கண்ணின் மணிபோல
என்னுள் நுழைந்தாயே என்னவளே - எண்ணம்
நிறைந்தவளே நெஞ்சினில் நீயாகி நின்றே
பிறைநிலவாய் வருவாய்ப் பணிந்து...

கண்ணுக்குள் வந்தாய் கனவாக எப்போதும்
எண்ணத்தில் நீயாக என்றென்றும் - வண்ணமாய்
வாழ்வை வசந்தமாக்க வந்ததும் நீதானே
தாழ்வு நிலைமை தளர்ந்து ...

விழியெனும் விண்மீன் வியப்பினி லாழ்த்த
வழிமறந்து நானும் விலக - பழியின்றி
பார்வையாய் வந்திடு பாதை மறவாமல்
பார்த்து நடப்போம் பணிந்து

# என்னைச் சுமக்கும் இனியவளே

மாடிவீடும் மண்ணாம் மரியாதை இல்லையெனில்
தேடிவரும் சொந்தம் தொலைந்திடுமே - நாடிவரும்
நட்புமே போற்றிடுமே நாளெல்லாம் நம்மையே
முட்செடியா தாங்கும் முனைந்து....!

உன்னை நினைக்கையில் உள்ளம் உருகுதடி
என்னை சுமக்கும் இனியவளே - என்றென்றும்
கண்ணின் இமையாகக் காத்திடுவேன் கண்மணியே
எண்ணமாக உன்னுள் எழுந்து...!

இனியவை நாளும் இனிமையாய் வாழ
இனிதே துவங்கி இயல்பாய் - துணிவாய்
செயல்படுவோம் எல்லா செயலும் சிறக்க
பயம்புறம் தள்ளிப் பணிந்து

மனத்தினில் வந்தே மனைவியா னாயே
எனக்கெனவே மண்ணில் எழுந்தே - கனவில்
வருவாய் வாழ்நாளில் வாழ்வாய் சிறப்பாய்
திருமதியாய் என்றும் திகைத்து...!

பார்வையொன்று போதுமே பார்த்திடவே நானுமே
நேர்கொண்ட பார்வையால் நோக்கிட - ஊர்போற்ற
ஒல்காப் புகழுடன் ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
இல்லற வாழ்வில் இணைந்து ...!

காத்திருக்கும் நேரம் கனவில் வருவாயே
பூத்திருக்கும் நேரமதில் புன்னகை செய்வாய்
உன்றன் முகம்பார்க்க உள்ளமும் ஏங்குதே
என்றும் மனதில் இருந்து

# தருவாயே யுன்ற னருள்

திருவுருவாய் வந்தாய் திகைத்துநின் றேனே
அருள்வாயே காமாட்சி அம்மா- திருவின்
உருவாக வந்தாயே உள்ளம் குளிர
தருவாயே யுன்ற னருள்

முருகனை கும்பிடு முக்தி பெறவே
அருள்தருவான் என்றனின் அய்யன் - திருவாய்
வருவான் நிறைவாய் வழங்கிட நாளும்
பெறுவாய் பணிந்தருள் பெற்று ...!

நிறைவாக தந்தாயே நின்ற னருளை
முறையாக வந்தோம் முனைப்பாய் இறைவா
திருவாய் மலர்வாய் திருப்பம் தருவாய்
திருமலை வாசா தினம்....

திருப்பம் தருவாய் திருமலை வாசா
விருப்பமுடன் வந்தோம் விரும்பித் - தருவாய்
அருளை நிறைவா யளித்திடு வாயே
வருவோமே என்றும் விரைந்து....